V.2 No.2 10 Jan 1929

JL
[illegible], N28KA
N29.2.2.
189037

OFFICIAL ... 1929 MADRAS

KALANILAYAM. தனிப்பிரதி ரூ. 0 3 0

கலா நிலயம்

வியாழன் தோறும் வெளிவரும்

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 0 0

காரியாலயம்:—
No. 11, வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol 2.] 1929 ஞ ஜனவரிமீ 10உ [No. 2.

பொருளடக்கம்.

		பக்கம்.			பக்கம்.
1.	தலையங்கம் (Ourselves).	21	5.	எபிக்திதன் (Epictetius).	
2.	கம்பராமாயணம்.			T. R. இராஜகோபால்	30
	T. N. சேஷாசலம் B. A., B. L.	23	6.	மேற்கின் இசைகள்.	
3.	அப்பர்.			A. ஸ்ரீநிவாசராகவன் B. A. (Hons)	33
	E.N. தணிகாசலமுதலியார் B.A., B.L.	25	7.	வர்த்தமானம்.	39
4.	தமிழ்ப் பாடம் (நளவெண்பா).	28			

சந்தாதாரராய்ச் சேர விரும்புவோர் எந்தத் தேதியிலிருந்து சேரலாமானாலும் கட்டுரைகள் பல தொடர்ச்சியாய் வருவதால் முன்னிதழ்களையும் பெற்றுக்கொள்வது நலம். வி. பி இல் அனுப்பச் சொல்வதைக் காட்டிலும், தொகையை மணியார்டர் செய்வதால் செலவு குறையும். ஸிங்கப்பூர் பினாங் தென்னுப்பிரிக்கா முதலிய புறநாடுகளுக்கு வி. பி. யில் அனுப்ப இயலாது. மானேஜர்.

கலா நிலயம்.

189037 188037

வறியரோ நாம்!

வாழ்க்கையின் வித்தாய் விளைநிலமாய் விளைந்த கதிருமாய் நிற்கின்றவொரு வாய்மை ஆன்மா. தத்துவ சாத்திரங்கள் பற்பல இவ்வான்மாவின் தன்மையைப் பற்றி ஆராயுமெனினும் சொல்லானுரைக்கப் புகுமளவில், "இது, இது, இது, இதுவன்று, இதுவுமன்று" என்று எதிர்மறையாய் விலக்க இயல்கின்றதேயன்றி, உடன்பட ஓதுதற்கு இயல்வதொன்றன்று ஆன்மா என்பது பிரசித்தம். ஆயினும், தன்மை யாதென்று தெள்ளிதின் இயம்புதற்கு இயலாத காரணத்தால் ஆன்மாவினது உண்மை அழிந்துவிடுகின்றதென ஒரு சிறிதேனும் ஒழுக்கமும் அறிவும் உடையோர்கூட மதித்துக் கூறமாட்டார். ஆன்மாவின்தன்மை இன்னதென நிச்சயிப்பதற்கு முயல்வனபோல் தத்துவசாஸ்திரங்கள் தோன்றினும் வாஸ்தவத்தில் அவைகளெல்லாம், வாழ்க்கையின் வாய்மைக்கும் அவ்வாழ்க்கையென்று நம் அனுபவத்தில் தென்படுகின்ற உருவங்களுக்கும் உள்ள ஒரு உறவைப்பற்றித்தான் துருவி ஆராய்கின்றன. ஆன்மாவை முதலில் அறிந்து அவ்வறிவைக்கொண்டு வாழ்க்கையின் அனுபவங்களாய் விவகரிக்கின்ற பல்வேறு உருவங்களது தன்மைகளை விளக்க முயல்வதைக்காட்டிலும், தெய்வமா முனிவர்களாய், திருவருட்கவிகளாய், தீர்க்கதரிசிகளாய், அவதாரபுருடர்களாய் இல்லாத நம்மனோர்க்கு நமது அனுபவங்களைக்கொண்டு அவ்வான்மாவிற்கும் இவ்வாழ்க்கைக்குமுள்ள உறவைச்சிறிது ஊகிப்பது ஒருபடி எளியதாகலாம். நம்முடைய தினசரி விவகாரங்களது மேன்மட்டத்தில், ஆசையாலும் அவ்வியத்தாலும் அலமந்து, காற்று எற்றிய கடல்போல் கொந்தளிக்குங் குழப்பத்தை ஒவ்வொருவேளை இறைமறந்து, சிந்தனையின் ஆழத்தமர்ந்த அமைதியின்கண் தோன்றுகின்ற அனுபவங்களுக்கு வயமாகிநிற்கின்ற அத்தருணத்தில், அவ்வான்மாவின், தன்மையை அல்லாவிடினும், அதனுண்மையையேனும், உரைகடந்தவோர் உணர்ச்சியால் உணர்கின்றோம் என்பது திண்ணம். இதனைத்தான் ஆன்மானுபவம் என்பர்.

இத்தகைய ஆன்மானுபவம் ஒவ்வொருவர் உள்ளத்திலும் ஒரு போதல்லாக்கால் ஒருபோது வாழ்நாட்களுக்குள் ஒருதரமேனும் தோன்றாது தீராது. சிலருக்கு என்றென்றும் எங்கெங்குந் தோன்றலாம். சிலருக்கு வாரமொருமுறை தோன்றலாம். மற்றவர்க்கு மாதமொன்றாகலாம், வருடமொன்றாகலாம், ஆண்டுபல கடந்த பின்னரே சிலர்க்கு மீண்டுமது தோன்ற நேரலாம். மற்று, முதலுரைத்தவண்ணம் பிறந்தநாள் முதல் இறக்குநாள் ஈறாக இடையே நின்ற காலத்திலெல்லாம் ஓரேமுறை இவ்வனுபவம், உண்டோ இல்லையோ என்னும்படி ஒரு மூலையில் தோன்றிய மாத்திரையில் சிலருக்கு மறைந்து போகவும் நேரலாம்.

இனி, இவ்வான்மானுபவம் தமக்கு எய்திற்று இல்லை என்று அறிதற்குரிய குறி யாதென வினவுவோர்க்கு ஒன்று கூறுவோம். ஏதேனும்ஒருபொருள், அல்லது ஏதேனும் ஒரு நிகழ்ச்சி எக்காலத்திலேனும் ஒருவருடைய அனுபவம் என்னும் வட்டத்திற்குள்ளே அமைதி நாடுகின்றபோது, தன்னை அவர் அப்பொருளோடாதல் நிகழ்ச்சியோடாதல் சேர்த்துக் கொண்டு, அதனால் தனக்கு என்ன நன்மை அல்லது

தீமையுண்டாம் என்பதைக் கணக்கிடாமல், அவ்விஷயத்தைப்பற்றி மாத்திரம் சிந்தித்ததுண்டோ, சிந்தித்து விருப்பேனும் வெறுப்பேனுங் கொண்டதுண்டோ, என்று உன்னுங்காலையில், அவ்வாறு சிந்தித்ததுண்டு என்று ஏற்படுமாயின் அவர்க்கு ஆன்மானுபவம் நேர்ந்திருக்கின்றதென்று துணியலாம். அண்டைவீட்டில் நேற்றிரவு திருடன் புகுந்தனன் என்பது தெரிந்தவுடன் நம்மிற்சிலர் சிரிப்போம், சிலர் பயப்படுவோம், பயத்தோடு சிலர் போலீஸார்மீது கோபங்கொள்வோம். "திருடனை என் வீட்டிற்குவர அஞ்சுவான். அவ்வயல்வீட்டான் அசடனானபடியால் திருடனுக்கும் அவன் எளியவனாகத் தோன்றினன்" என்னுமோர், தன்னைப்பற்றிய கருத்தால் வந்த சிரிப்பு அது. மற்று, "இன்றிரவு என்வீட்டிற்கும் அத்திருடன் வந்துவிட்டாலோ" என்ற எண்ணத்தால் உண்டாயது அப் பயம். போலீஸார் தம் கடமையைச் செய்யாத கோபம் 'என் வீடும் காக்கப்படாது போகுமோ' என்ற பயத்தால் விளைவதேயன்றி வேறன்று. இவ்வாறின்றி, "ஐயோபாவம், பொருளை இழந்தவன் என்ன கஷ்டப்படுகின்றனனோ! அதனைக் கவர்ந்தவன் என்ன தரித்திரத்தின் கொடுமையால் இக்காரியஞ் செய்தானோ! திருடுமுன் அவன் மனம் தீச்செயலிற்கு இணங்காமல் எவ்வளவு தவித்துப் பிறகு வேறுவழி யில்லையென்று இதற்குந்துணிந்ததோ! மற்று, அகப்பட்டுக்கொள்ளாதிருக்க வேண்டுமே என்று என்ன பாடுபடுகின்றனனோ! அகப்பட்டுக்கொண்டுவிட்டால் என்ன என்ன கஷ்டங்களுக்கு அவன் ஆளாகவேண்டுமோ" என்று இன்னவகையில் சிந்தனை செல்லுவது மாகலாம். இப்பின்னதாகிய சிந்தனையே, ஆன்மானுபவம் எனத்தக்க தல்லதாயினும், அவ்வனுபவம் எய்தியவர்களது மனம் செல்கின்ற நெறி இத்தகையதா யிருக்குமெனக் கூறல் பிழையாகாது. இத்தகைய சிந்தனையில் ஊறுகின்ற விருப்பு வெறுப்புக்கள் நம்மைச் சார்ந்தனவா யிரா.

அழகிய கனியொன்று மரத்தில் பழுத்துத்தொங்கக் காண்கிறோம். கண்டவுடன் அதனை நாம் தின்னவேண்டும் என்ற நினைவு ஏற்படுமாயின் அப்பொழுது மனமானது சரீரத்தால் ஆளப்படுகின்றது. அப்படிக்கின்றிச் செம்பொன்னிறமாகித் திரண்டு முதிர்ந்த அப்பழமும் அதனைக் கிளியொன்று கூவிக் கூவிக் கோதுவதுமாகிய காட்சியும் நம்மனதிலே ஒருவித உணர்ச்சி உண்டாக்குவதோடு நின்றுவிட்டு நம்வாய்க்குள் அப்பழம் வந்து புகவேண்டும் என்ற எண்ணமே எழாது அமையுங்காலையில் ஒருசிறிது நமக்கு ஆன்மானுபவம் உதிக்கின்ற தென்னலாம். இப்படியே உதாரணங்களைப் பெருக்கி ஆராய்ந்து அவைகளுக்கெல்லாம் மூலாதாரமா யிருக்கின்றவொரு பொதுத்தன்மையை ஆராய்ந்து பார்த்தால் ஒன்றுதென்படும். பிரபஞ்சத்திலுள்ள விஷயங்களோடு நாம் எண்ணிறந்த வகைகளில் ஊடாடி நிற்கையில், அவ்விஷயங்களில் சில நமக்கு நன்மை பயக்கும் என முன்னனுபவத்தால் தேர்ந்திருப்பனவற்றை நாம் நமக்கு உடைமையாய் உரிமையாய் நம்மோடு சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று நினைத்துவருகின்ற எண்ணில் பல்கோடி நினைவுகளுக்கிடையே, என்றேனும் ஒருபோது நமது உள்ளம் நம்மைவிட்டுச் சிறிது கழன்று அவ் விஷயத்தின்பால் சென்று அதனோடு கலந்திருந்து வருமாயின் அப்படிக் கலந்திருக்கச் செல்லுமந்த நொடியில் உதிக்கின்ற அவ்வுணர்சி ஆன்மானுபவம் ஆகும். சாதாரணமாக, எங்கெங்கும் எப்பொழுதும் நமது உள்ளம் எல்லாவற்றையும் தன்பால் கவர்ந்துகொள்ளவே கற்றிருக்கின்றது. இதற்கு மாறாக, இவ்வுள்ளம் நம்மைவிட்டுப் பிறிதொரு பொருளால் கவரப்படுவதற்கு இயன்றதா யிருக்குமாயின், அவ்வாறு கவரப்படுந் தருணங்களில் ஆன்மானுபவத்தின் தன்மையை ஒருவாறு உணரக்கூடிய நிலையினராயிருக்கலாவோம்.

இன்னபடி பிரபஞ்சத்திலுள்ள பொருள்களையும் விஷயங்களையும் நம்முடைய தாக்கிக்கொள்ளாமல் நாம் அவைகளோடு கலந்துகொண்டு நாமே அவைகளாய் நிற்கின்றநிலை, ஒவ்வொரு நாளும் மாலைச்சூரியன் சிவந்துருண்டு சில மேகங்களுக்கிடையே தவழ்ந்து சாயுங்காலத்தைக் கண்ணுறுந்தோறும், தெண்ணீர்க் கடல்திரண்ட அமுதம் பொங்கப்பொங்க மேலெழும் ஓர் செம்பொன் கலசம்போல் உதிக்கின்ற திங்கள் தோன்றுந்தோறும், அடுக்கடுக்காய்க்கார் முகிற்குலங்கள் மின்னியும் இடித்தும் வானப்பரப்பிலே மண்டுந்தோறும், நள்ளிரவில் அயலே முழங்கும் கடலொலி கேட்குந்தோறும், குயிலின்குரல் உருவிலாதவோர் ஒலியாய் நம்செவியில் எட்டுந்தோறும், கடைவாய் வழிகின்ற பாலோடும் புன்சிரிப்பு உதடுலவக் கண்வளரும் இளஞ்சிறு மகவைத் தொட்டிலில் காணுந்தோறும், நறுமலர்ச் சோலைநின்றுவந்த இளந்தென்றல் நமதுடலைத் தீண்டுந்தோறும், இவையனைய எவ்வளவோ விதமான செவ்விகளில், நம்மையே அறியாமல் அடைகின்றோம். நமது வாழ்நாட்களினெல்லையில் ஒரு சமயத்திலேனும் நாம் இவையனைய விஷயங்களில் ஈடுபட்டு நமது உள்ளத்தை ஒரு நொடி ஒருநிமிடம் அர்ப்பணம் செய்து அறியோமாயின் ஆன்மானுபவம் என்னுமத் திப்பியநிலை நமக்கு நேர்ந்ததே இல்லையென்று நிச்சயித்துக்கொள்ளலாம்.

முன்ஜன்ம வாசனையின் தொடர்பினாலேனும், இதனை நம்பாதார் எண்ணும் வண்ணம் அவரவர் இயற்கைஅமைப்பினாலேனும், இவ்வான்மானுபவம் எய்தியிராமாந்தருக்கு உற்றதுணையாய்உடனின்று அதனை எய்துவிக்கும் உதவி கலைகள் புரியுமாறு எவ்வாறெனச் சென்றவாண்டு "கலாநிலயம் செய்யுங்கருமமும் செயல்வகையும்" என்ற தலைப்பின்கீழ் வரைந்த ஒன்பது தலையங்கங்களில் விரிவாக விளக்கியிருக்கின்றோமாதலால் ஈண்டதனை எடுத்தியம்புவதுமிகை. ஆயினும், கலைகளினது அழகில் பழகிப்பழகிப் பயில்கின்ற மனம் சுயநலப்பயனை நினைக்காமல் விஷயங்களையும் பொருள்களையும் அவைகளுக்காகவே அனுபவிக்கக் கற்றுமுதிர்கின்ற கொள்கையை உய்ய நினைப்பவர் யாவரும் ஒருபோதும் மறத்தலாகாது.

இத்தத்துவங்களைக்கொண்டு இந்தியா இந்நாள் வறுமையால் உழல்கின்றதென்னும் கருத்தை ஆராய்ந்தால் என்ன முடிவுவரும் என்று யோசித்துப் பார்ப்பவர்கள், வற்றாத செல்வத்தின் வளம் மிகுந்த இந்நாட்டினை வறியதென்று விளம்புவதேனோவென ஆச்சரியம் மிக எய்துவார். தனக்கிது வேண்டும்வேண்டும் என்று விவகரிக்கின்றவர் யாவரும் வறியரே. இத்தகைய வறுமையை எந்த ஆட்சிமுறையும் தனதாய விதிகளும் வர்த்தகமும் நீக்கவே முடியாது. உலகப் பொருள்களை உட்கொள்ளவேண்டினால் அவ் வேட்கை எவ்வாறு நிறையக்கூடும்? அஃதன்றி உலகத்திற்கு நம்மை அளிக்கப்புகுங் காலையில் அவ்வாறு அளிப்பதற்கு நாமேயாகிய பெருஞ் செல்வத்தை உடையவர்களா யிருக்கின்றோம். சுயநலக்காரியங்களின் சிறுமையிற்றான் நம்முடைய ஏழ்மை நிலக்கின்றது. தனக்கென்று வாழாப் பெருவாழ்விற்கு வேண்டிய செல்வம் இல்லாதார் யாரே உளர்!

கம்ப ராமாயணம்.

பாலகாண்டம்

10. மிதிலைக் காட்சிப் படலம்.

OFFICE OF THE ... MADRAS

இன்பப் பொருளும் பொருளி னின்பமும்.

15வது பக்கத் தொடர்ச்சி

தீட்டுதற்குக் கோலிலே தோய்த்தவமுதம் உலர்ந்துலர்ந்துபோம்படி சீதையின் வடிவைச் சித்திரத்திலும் எழுதவொண்ணாமல் திகைக்கின்றான் மதனன். அவள்மேனியினெழிலைக் காணுமளவிலே உமையாளொக்கும் மங்கையர்உச்சிக்கரம் வைக்கின்றனர். இருகண் இமையாதிருந்தும் இவளழகின் கரையைக் கண்டிலம் என ஏங்குவார் அமரரெல்லாம். அன்னாள்செந்தமிழ்க் கவிச்சுவையின் இன்பமேபோல்,

தந்நே ரில்லா மங்கையர் செங்கைத் தளிர்மானே
அன்னே தேனே யாரமிர் தேயென் றடிபோற்றி
முன்னே முன்னே மொய்ம்மலர் தூவி முறைசாரப்
பொன்னே சூழும் பூவி னொதுங்கிப் பொலிகின்றாள்

[சீதையின்பால் அன்பிலே தமக்கு நிகரொரு மில்லாத தாதியர் சிலதியர் முதலிய மங்கையர், "மானே தேனே அரிய அமிர்தமே" என்று தம் தளிர்போன்ற சிவந்த கைகளால் அவளது அடிகளை வணங்கி, அவள் செல்லுமிடமெல்லாம் எதிரே மலர்களை அடர்த்தியாகத் தூவி வரிசையாய் நெருங்கிவர, பூவிலே தங்கும் இலக்குமியைப்போல நடமாடி விளங்குகின்றாள்]

முன், "கழிபேடோ டன்னம் மாடும் முன்துறை கண்டங் கயல்நின்றார்" என்ற கம்பரடியில், "அன்னந் துணையோடாடக்கண்டு நென்னல் நோக்கி நின்றாரொருவர்" எனவரும் சிலப்பதிகாரச் செய்யுளின் எதிரொலி கேட்டவாறே, இப்பாசுரத்தில்

கரும்பே தேனே யமிர்தே காமர் மணியாழே
அரும்பார் மலர்மே லணங்கே மழலை யன்னம்மே
சுரும்பார் சோலை மயிலே குயிலே சுடர்வீசும்
பெரும்பூண் மன்னன் பாவாய் பூவாய் பிணைமானே

அம்மெல் லனிச்சம் மலரு மன்னத் தூவியும்
வெம்மை யாமென் றஞ்சி மெல்ல மிதியாத
பொம்மென் னிலவப் பூம்போ தனநின் னடிபோற்றி
இம்மென் கலையா ரிடுவென் றேத்த வொதுங்கினள்.

என இலக்கணையா ரிலம்பகத்தில் வரும் சிந்தாமணிச் செய்யுள்களின் எதிரொலியுங் கேட்கலாகின்றது. ஆயினும், கம்பர் அச்சொற்களின் சிலவற்றையே தேர்ந்துகொண்டு மற்றவைகளை விட்டுவிட்டது, முற்றிலும் பிறர்செய்யுளை எடுத்தமைத்துக் கொள்ளுதல் தக்க தாகாதென்னும் முறைமையாலேயே நேர்ந்ததாக நினைத்தற்கில்லை. சிந்தாமணிக்கு உரைகண்ட நச்சினார்க்கினியர் அவ்வாகுபெயர்களின் உவமையமைதியை விளக்குவாராகி, "கணவற்கு மெய்ம்முழுதும் இனிதாயிருத்தலின், கரும்பு. நல்லாருறப்பெல்லாங்கொண்டு இயற்றலின், தேன். இவ்வுலகிலில்லாத மிக்க சுவையும் உறுதியுங் கொடுத்தலின், அமிர்து. காமவேட்கையை விளைவித்து இனிய பண்தோற்றலின், மழலையை உடையதோர் யாழ். கணவற்குச் செல்வத்தைக் கொடுத்தலின், திரு. நடையால் அன்னம். சாயலால் மயில். காலமன்றியுங் கேட்டோர்க்கு இன்பஞ் செய்தலின், குயில். மன்னன் மகளேயென்றல் புகழன்மையின், மன்னன்பாவாயென்றது, அவன் கண்மணிப் பாவை யென்பதுணர்த்திற்று; இனிஇவள் கொல்லிப் பாவையல்லள்; மன்னன் பாவை யென்றுமாம். சேடியர் கற்பித்த கட்டளை தப்பாமற் கூறலின், பூவை. நோக்கத்தால் மான்." என்று எடுத்துக் காட்டுவார். கணவற்கு மெய்ம்முழுதும் இனிதாயிருத்தலும், காமவேட்கையை விளைவிக்கும் பெற்றியதாய் பண்தோற்றலும் இலக்கணையைக் கண்டார்க்குப் பிறக்கக்கூடிய நினைவுகளாயிருக்கலாம். சீதையின் உழையராவார்க்கு அவளை 'அன்னையே' என்றழைப்பதற்கே மனங்கொள்ளும், வாயும்வரும். இவள் கணவனுக்கு எவ்வகை இன்பம் பயப்பதற் கேற்றவள் என்னும்நினைவெழாது, தம்முடைய மனதிலே அவள் தோற்றம் நிறைந்து திகழ்கின்றதால் எழுந்த சொற்கள் மாத்திரமே, மானே என்றும் தேனே என்றும் அமிர்தே என்றும், சீதையைச் சூழ்ந்திருந்த மங்கையர் மொழிந்தழைக்கலாயினர். சீதையைக் காணுங்கால் நினைக்குங்கால் மனதில்நிகழும் மகிழ்வும் இன்பமும், பூரணமாய அச்சீதையே நிகழ்த்தியதேயன்றி அவள் நடையாலுமன்று, குரலாலுமன்று, சேடியர் கற்பித்த கட்டளையைக் கடவாமல் கூறலாலுமன்று அவைவிளைவன. ஆதலின் கம்பர், கணவர்க்கு மெய்ம்முழுவதும் இனிதாயிருத்தலின் கரும்பை விட்டார். காமவேட்கையை விளைக்கும் பண்தோற்றலின் யாழை விட்டார். "அரும்பார் மலர்மே லணங்கே" என்பதை விடுவதற்கு மனம் வராதவராகி அவர், 'கணவற்குச் செல்வத்தைக் கொடுத்தலால் திரு' என்னும் கருத்துத் தோன்றுவதையும் காத்தற்பொருட்டுச் சிலதியர் அழைப்பதாக வைக்காமல், 'பொன்னே சூழும் பூவின்' எனத் தன் கூற்றாக மாற்றிக் கொண்டார். சீதையைக் காணும்போது அவள் நடையையும் குரலையும் கற்பனை தப்பாமற் கூறுகின்ற சொற்களையும் உறுப்புறுப்பாகப் பிரித்து நினைத்து இன்பத்தைக் கலைக்கவேண்டாவென்று அன்னமும் குயிலும் பூவையும் போயின. சீதையால் விளைகின்ற இன்பத்தை விளைவிப்பது அச்சீதை என்னும் முழுமையே யாகும். வடிவும் மேனியும் விளங்கு மெனினும், ஒவ்வொருவர்க்குமுரிய தனித்தன்மையைத் தோற்றுவிப்பது கண்ணின் நோக்கமே யாதலால், மான் மாத்திரம் இவ்விரு செய்யுள்களுக்கும் பொதுவாய் நிற்கின்றது. இன்பமளிப்பவள் சீதையெனற்கு அவ்வின்பம் என்னும்தன்மைக் குதாரணமாகத் தேனும் அமிர்தும் இங்குக் கொள்ளப்பட்டன. ஆதலின், சிந்தாமணியையும் இலக்கணைக் குரியபடி நச்சினார்க்கினியர் இச்செய்யுளிற்குக் கண்ட உரையையும் கற்றிருப்பவர் அயர்ந்தேனும் சீதையின் திறத்தில் அவைகளைச் சார்த்தா வண்ணம், கரும்பும் யாழும் அன்னமும் குயிலும் பூவையுமிங்குச் சேர்க்காமல் கம்பர் அகற்றினரென்னும்படி அவர் செய்யுள் தீர்ந்திருக்கின்றது.

இதுவன்றி, சற்றுமுன் சீதையைச் செஞ்சொல் கவியின்பமாக உருவகஞ் செய்ததோடு இங்குக் கரும்பும் யாழும் அன்னமும் குயிலும் பூவையும் பாராட்டாமல் விடுத்த பொருத்தத்தையும் சேர்த்துநோக்கினல் பின்னும் நுண்ணிய வொருபொருள் தென்பட

லாகும். கவியினது இன்பம் மனதால் உணரப்பட வேண்டுமேயன்றிச் சுவை ஒளி ஊறு ஓசை நாற்றங்களுக்கு அது இலக்காய தொன்றன்று. ஆதலாற்றான், "பொன்னின் சோதி போதினினாற்றம்" என்ற செய்யுள், "கண்டு கேட்டுண்டுயிர்த் துற்றறியு மைம்புலனும் ஒண்டொடி கண்ணே யுள" என்னும் திருக்குறளோடு இணைந்து நடப்பதுபோல் தென்பட்டாலும், இக்குறள் நிற்கின்ற அதிகாரத்தையும் அதன் துறையையும் கருதுங்கால் சீதாபிராட்டிக்கேனும் அவளுருவமாகிய கவியின்பத்திற்கேனும் அது அடுக்காதென விலக்குவதே தகும். இதுவே இன்பம் என்று கருதப்படுகின்ற பொருளிற்கும், இதனால் இன்பம் பயக்கும் என்று கருதப்படுகின்ற பொருளிற்கும் வேற்றுமை இருக்கின்றதென்பது வெளிப்படைபோல் தோன்றினாலும் அவ்வேற்றுமையின் அருமை ஆழ்ந்து நோக்கிய பிறகே தெரியவரும். மனைவியின் நலத்தைத் துய்க்கின்ற கணவன், அவளால் பெற்ற பயன் இன்பம், என்னும் எண்ணத்தனாய் மகிழ்கின்றான். அவ்வின்பப் பயனை உதவியதற்காக அவளைப் பாராட்டுகின்றானல்லாது அவளே இன்பம் என்னுங்கொள்கை அவன் கருத்திலில்லை. நமதன்னை ஜனகன்மாமகள் அத்தகையளல்லள். அவளோ இன்பமாவதால் கவியின்பம் போன்றாள். ஏனெனில், கவியென்பது, மாதருள் சீதை உத்தமியாவதுபோல், கவிகளுள் உத்தம கவியாயிருக்குமாயின், தானே இன்பம் என்னுந் தன்மைத்தேயல்லாது தன்னின்று வேறாகவோர் இன்பத்தை நல்கக் கூடியதன்று. கவிநயம் உணர்ந்தோர்தம் வாய்ச்சொல்லே இதற்குச் சான்றாகும். 'இக்கவி யின்பமாயிருக்கின்றது' என்பாரேயன்றி, இன்பத்தைத் தருகின்றது என்று இயம்பார். ஆம், இவ்விரண்டிற்கும் வேற்றுமை என்னென்று வினவினால் எடுத்துக்காட்டுவது எளியதன்றெனினும் சொல்லினது வரம்பிற்கும் தர்க்க விதிகளுக்குமடங்காத உள்ளுணர்வு (Instinct) இவ்வேற்றுமையை மேற்கொண்டு விளம்புமாறே வாயைத் தூண்டி வருகின்றது. நடையும் ஓசையும் இலக்கணம் விதித்த கட்டளைகளும் கவிக்கு இன்றியமையாதனவேனும் இவ்வுறுப்புக்களல்ல அக்கவியின்பம் என்பன. அழகுமிகுந்தவோர் செய்யுளை ஓதி மகிழ்கின்ற காலையில், அதன் அடிகளின் நடையையும் இழுமென் ஒலியையும் யாப்பினதமைப்பையும் கருத்தின் மேன்மையையும் கொண்டாட நேர்வது உண்மையே. அழகிற் சிறந்த இலக்கணையைக் காணுமளவில் அன்னமும் குயிலும் பூவையும் நினைவின்கண் நேரலாம். ஆனால், உத்தமத்திலும் உத்தமமாய் ஒருபடி உயர்ந்திருக்கின்ற கவியினது இன்பம் நடையும் ஓசையும் காரிகையார் கட்டளையும் கருதும்படி செய்யாமல் சீதையைப்போல் தானேயாய்த் தனிநிற்குந்தன்மைத்து. ஆதலின், கரும்பாயல்லாது கவியின்பமாகின்ற சீதை, இலக்கணை அழைக்கப்படுவதுபோல் அழைக்கப்படுவதற்கு ஏற்றவளாகாமைக்கிணங்கிக் கம்பர் செய்யுள் சிந்தாமணியினின்று மாறி வரலாயிற்று.

தன்னின்றோர் இன்பம்அடைதலென்னும் தன்மை தோன்றாமல் தானே இன்பம் என்று சீதாபிராட்டி எய்திய இச்சிறப்பிற்கு ஏற்கப் பின்வரும்செய்யுள்களும் அமைந்திருக்கின்றன. பொன்னே சூழும் பூவினைதங்கிப் பொலிகின்ற அவள்,

பொன்சேர் மென்காற் கிண்கிணி யாரம் புனையாரம்
றொன்சே ரல்குன் மேகலை தாங்குங் கொடியன்னார்
தன்சேர் கோலத் தின்னெழில் காணச் சதகோடி
மின்சே விக்க மின்னர சென்னும் படிநின்றாள்.

[அழகிய மெல்லிய கால்களில் சதங்கையும், இரத்தின ஹாரமும், மலர்மாலைகளும், மேகலையுந் தரித்த பூங்கொடியனைய தோழிமார், இவளது வடிவத்தின் இனிய அழகை மகிழ்ந்து பார்த்திருக்க, நூறுகோடி மின்னல்கள் சேவித்திருக்க அவைகளுக்கிடையே மின்னலின் அரசே இவள் என்று சொல்லும்படி நின்றாள்.]

தோழியர் இங்குச் சீதையின் அழகை முழுமையாகக் கண்டுமகிழ்ந்து நின்றனர் என்பர் கம்பர். அவளது அழகிற்கு இருப்பிடமென்று சில அங்கங்களையேனும், இவ்வழகைக் காண்கின்ற இன்பமல்லால், நுகர்தற்குரிய இன்பம் வேறு ஒன்று இருந்ததென்றேனும், சீதையுடன் பயில்கின்ற பாங்கிமார் கருதினாரல்லர். மற்று, இலக்கணையாருக்கு மணக்கோலமணிந்த மங்கையரோ, அவளது

வாண்மதர் மழைக்க ணோக்கி வருமுலைத் தடமு நோக்கிக்
காண்வர வகன்ற வலகுற் கண்விருப் புற்று நோக்கிப்
பாணுவண் டரற்றுங் கோலச் சிகழிகை வடிவு நோக்கி
ஆண்விருப் புற்று நின்றா ரவ்வளைத் தோளி னாரே.

[விருப்பமுற்றுத் தங்கண்ணாலே அவள்கண்ணையுநோக்கி, முலையையும் நோக்கி, அல்குலையும் நோக்கி, வண்டொலிக்கும் முடியின் வடிவையும் நோக்கி, இவளை நுகர்தற்குரிய ஆண்மையைத் தாம் அடைய விரும்பி நின்றார்]

சீதாபிராட்டிக்குப் பின்னாள் மணக்கோலம் பூட்டி வைத்த சேடிமாரும்,

கஞ்சத்துக் களிக்கு மின்றேன் கவர்ந்தனும் வண்டு போல
அஞ்சொற்கள் கிள்ளைக் கெல்லா மருளினா ளழகைமாந்தித்
தஞ்சொற்கள் குழறித் தத்தந் தகைதடு மாறி நின்றார்
மஞ்சர்க்கு மாத ரார்க்கு மனமென்ப தொன்றே யன்றோ.

[கிளிகளுக்கெல்லாம் அழகிய சொற்களைப் பழக்கி அருளிய இச்சீதையின் அழகைத், தாமரையிலுள்ள களிப்பைத் தருகின்ற இனியதேனைக் கவர்ந்துஉண்ணும் வண்டுபோல, மாந்தி, தம்சொற்கள் குழறித் தம் தம் தன்மை தடுமாறி நின்றார்—மைந்தருக்கும் மாதர்களுக்கும் அழகிற் கீடுபடும் தன்மையில் மனம் என்பது வித்தியாசம் யாதுமின்றி ஒரே மாதிரியானது தானன்றோ]

என்றவாறு சீதையின் அழகை முழுமையின் மாந்தினாரன்றிக் கண்ணும் முலையும் அல்குலும் சிகழிகை வடிவும் நோக்கினாரல்லர். கள்ளுண்ட வண்டுபோல் அவ்வழகால் பரவசமாகித் தத்தம் தகைதடுமாறித் திகைப்புற்றதல்லால், அவள்பால் எவ்விதவிருப்பும், அதனினும் ஆண்விருப்பை யிவர் உற்றதில்லை. சீதையைத் கண்ணுறுவோர் ஆடவரேனும் மாதரேனும் இருவர்க்கும் இன்பமயமாய் அவள் உருவந்தோன்றுமேயன்றி, இவர்தங்கருத்துப் பிறிதொரு இன்பத்தைப் பயனாகப் பெறலாம் என்று நாடாது.

ஆயின், இன்னபடி இலக்கணையும் அவள்போன்ற அருங்கல மனைய மாதரும்போ லல்லாது சீதையின்பால் இருந்தவத் தனித்தன்மை எத்தகைமைத்து என்று வினவுவோர்க்கு,

கொல்லும் வேலுங் கூற்றமு மென்னும்
இவை யெல்லாம்
வெல்லும் வெல்லும் மென்ன மதர்க்கும்
விழிகொண்டாள்
சொல்லும் தன்மைத் தன்றது குன்றுஞ்
சுவருந்திண்

கல்லும் புல்லுங் கண்டுரு கப்பெண்
கனிநின்றாள்.

[கொல்கின்ற வேல் எமன், இன்னும் இவைபோல் உவமையாய் வருகின்ற எல்லாவற்றையும் தனக்கு நிகராகாதென்று வெல்லும் வெல்லும் என்னும்படி களிக்கின்ற கண்களையுடைய அச்சீதாபிராட்டியின் தன்மைசொற்களால் சொல்லக்கூடிய தொன்று அன்று. மலையும் சுவரும் திண்ணிய கல்லும் புல்லும் கண்டு உருகப் பெண்மையெனும் நலங்களெல்லாம் கனிந்தவொரு கனிபோன்ற அவள்நின்றாள்]

ஆதலின், இன்ப உருவாய அவ்வழகை அவளது அங்கங்களால் அறிய நினையாததுபோன்றே, அறிதற்கு வேண்டிய ஐம்புலன்களும் மறுதிறத்தில் வேண்டாவென்பது கல்லும் புல்லுமேகண் டுருகுவதால் தெரியலாகின்றது. கம்பருக்கு நிகராக அழகினது ஆட்சியை அனுபவித்துணர்ந்திருந்தவர் ஆங்கிலக்கவி கீட்ஸ் (Keats) என்பவர். அவரும் 'அழகுடைய பொருளொது, என்றென்றும் அதுவே இன்பம்" (A Thing of Beauty is a Joy for Ever) என்று பாடியபோது கம்பரைப் போலவே அழகுடைய பொருளால் பெறுவது இன்பம் என்னாது, அப்பொருளே இன்பமென உரைப்பது கருதற்கொத்ததாம்.

189037

அப்பர்.

1. பிறப்பும் இளமையும்.

2. அப்பர் குடி.

7வது பக்கத் தொடர்ச்சி

அப்பர் வேளாள * குலத்தினரென்பதும் குறுக்கையர் குடிப் புகழனார் மகனாரென்றும் சேக்கிழாரால் தெரியவருகின்றது. வேளாளகுலத் தொழிலாகிய பயிர்த் தொழிலில் மருணீக்கியார் சிறந்த அநுபவமுடையவரென அவர் பாடல்கள் † காட்டுகின்றன. அவற்றின் உருவங்கள் அமைப்பு வாகீசர் மேன்மையையும் காட்டும் பயிர்த்தொழிலி லுள்ள ஒவ்வொரு அங்கங்களின் இலக்கணமும் இவர் நன்குணர்ந்தவர். இதனால் கண்டவுடன் நிலவளத்தை அறியும் திறம் பெற்றிருந்தனர். இவர் தேச சஞ்சாரியாய்த் திரிந்து ஆங்காங்குள்ள சிவஸ்தலங்களைப் பாடிவரும் சமயங்களில் இயற்கைக் காட்சிகளை வர்ணிக்குங்காலை, எந்தெந்த நிலங்களை இவர், புகழ்ந்துரைத்தனரோ, அந்நிலங்கள் ‡ இந்நாளிலும் மேன்மையான பயிர் நிலங்களாயிருக்கின்றன. பயிர்த்தொழிற் சம்பந்தமான மாடு வியாபாரமும் † அதிலுள்ள தற்கால அயோக்கியத்தன்மைகளும் அப்பர் காலத்திலும் இருந்தனவென்றும் அப்பர் அவற்றைக்கண்டு வருந்தியதாகவும் நாம் அறிகிறோம்.

அப்பர் பிறந்த குறுக்கையர் குடி வேளாளகுலத்தில் ஒரு சிறந்த பரம்பரை. விருந்தோம்புங்குணமாத்திரமன்று; மற்றைய பல்வகை நல்லொழுக்கங்களிலும் சிறந்த குடி. செந்தண்மை பூண்டொழுகும் அந்தணர் குணமும், பகைவருக்குப் புறங்காட்டா க்ஷத்திரிய வீரமும் சிவனடியாரைக் கண்டவுடன் பணிந்து கொண்டு செய்யுமன்பும் பெற்று ஆரியவகுப்பு நான்கிலும் உள்ள நற்குணங்க ளமையப்பெற்ற குடியாம். ‡ தற்காலத்திலுள்ள பந்துக்கள் தாயாதிகள் காட்டும் துவேஷம், பொறாமை முதலிய துற்குணங்கள் அக்குடியி லில்லையென்றே நாம் அனுமானிக்க வேண்டியதா யிருக்கின்றது. * பந்துக்களின் ஐக்கிய பலத்தினாலே கணவனையிழந்த மடந்தை உடன் கட்டை யேறுவதும், தான்பெற்ற குழந்தைகளைப்

* தலத்தின்கண் விளங்கியவத் தனிப்பதியி லனைத்துவித
நலத்தின்கண் வழுவாத நடைமரபிற் குடிநாப்பண்
விலக்கின்மனை யொழுக்கத்தின் மேதக்க நிலைவேளாண்
குலத்தின்கண் வரும்பெருமைக் குறுக்கையர்தங் குடி
[விளங்கும்.
பெரியபுராணம்.—

† 1. மெய்ம்மையா முழவைச் செய்து
விருப்பெனும் வித்தை வித்தி
பொய்ம்மையாங் களையை வாங்கி
பொறையெனும் நீரைப் பாய்ச்சித்
தம்மையு நோக்கிக் கண்டு
தகவெனும் வேலி யிட்டுச்
செம்மையு ணிற்பராகிற் சிவகதி
விளையு மன்றே
அப்பர்-தனித் திருநேரிசை.—

2. உயிர்நிலை யுடம்பே காலா யுள்ளமே தாழி யாகத்
துயரமே யேற்றமாகத் துன்பக்கோ லதனைப் பற்றிப்
பயிர்தனைச் சுழிய விட்டுப் பாழ்க்குநீ ரிறைத்து மிக்க
அயர்வினா லைவர்க் காற்றே னாரூர்மூ லட்ட னீரே.
அப்பர்-திருவாரூர்-திருநேரிசை.

3. புள்ளுவ ரைவர் கள்வர் புனத்திடைப் புகுந்து நின்று
துள்ளுவர் சூறைகொள்வர் தூநெறிவிளையவொட்டார்
முள்ளுடை யவர்க டம்மை முக்கணான் பாத நீழல்[மே
உள்ளுடை மறைந்து நின்றங் குணர்விலா லெய்ய லா
அப்பர்-தனித்திருநேரிசை.—

‡ விட்டு வெள்ளம் விரிந்தெழு காவிரி
யிட்ட நீடவயலே விளைவயல்
கொட்ட மாமுழ வோங்கும் குரக்குக்கா
இட்ட மாயிருப் பார்க்கிட ரில்லையே
—திருக்குரக்குக்கா-திருநேரிசை-

† 1. மாட்டைத்தேடி மகிழ்ந்து நீர் நும்முளே
நாட்டுப் பொய்யெலாம் பேசிடு நாணிலீர்
கூட்டை விட்டுயிர் போவதன் முன்னமே
காட்டுப் பள்ளியு ளான்கழல் சேர்மினே
—திருக்காட்டுப்பள்ளி-திருக்குறுந்தொகை.

2. மாடு தேடி மயக்கினில் வீழ்ந்துநீர்
ஓடி யெய்த்தும் பயனிலை யூமர்காள்
சேடர் வாழ்சேறைச் செந்நெறி மேவிய
ஆட லான்ற னடியடைந் துய்ம்மினே
—திருச்சேறை-திருக்குறுந்தொகை-

‡ உயர் குடியா யிராவிடில், அரச சேனாதிபதியான கலிப்பகையார், இக்குடியில் பெண்கொள்ளச் சம்மதிக்கமாட்டார். இதன்றியும் திருமறுமாற்றத் திருத்தாண்டகத்தில் "நாம்" என்று பன்மையில் கூறியது, அப்பர் பிறவிச் செல்வத்தைக் குறிப்பிடுகின்றது.

* 1. கேட்டிலேன் கிளைபிரியேன் கேட்குமா கேட்டியாகில்
நாட்டினே னின்றன்பாத நடுப்பட நெஞ்சினுள்ளே
மாட்டினீர்...
கோயிற்றிரு நேரிசை.—

பற்றியாதொரு சிந்தனையுமின்றிப் புருடனுடன் வாழ் நாள் துறப்பதும் * இக்குடியில் வழங்கிவந்ததாயும் வெளியாகின்றது.

3. அப்பர் திருவவதாரம்.

மாதனியார் திருவயிற்றில் அவர் தவப்பயனெனத் திலகவதியார் என்னும் ஒரு பெண்மகவு வாய்ந்த தென்றும், அப்பெண்குழந்தை அவதரித்துச் சிலவருஷங்களுக்குப் பின்னர் மருணீக்கியார் உதித்தனரென்றும்பெரியபுராணத்தாலறிகின்றோம். திலகவதியார்பிறந்த சிலவாண்டுகளுக்குப் பின்னர் மருணீக்கியார் திருவவதாரமென்று சேக்கிழார் மொழிந்தனரன்றி எந்த மாதம், எந்த வாரம், எந்த நக்ஷத்திரம் என்பது அவர் கூறவில்லை. சேக்கிழார் காலத்தில் அவை யாதேனும் தெரிந்திருப்பின் அவர் அவற்றைச் செப்பாதுவிடார். பல † அடியார்களைப் பற்றிப் பாடிய அப்பர், தன்னைச் சமணமதத்தினின்று நீக்குவதற்கு ஏதுவாகிய தன் தமக்கையாரைப் பற்றி வெளிப்படையாய்க் காட்டும் பாடல் பாடியதாய்ச் சேக்கிழாரும் கூறவில்லை.

இதன்றியும் அந்த அம்மையாரைப் பற்றித் திருஞானசம்பந்தரும்திருவதிகை வீரட்டானப் பதிகங்களிலும் மொழியவில்லை. சுந்தரமூர்த்தி நாயனார் தாம் பாடிய திருத்தொண்டத் தொகுதியிலும் திலகவதியார் திருநாமத்தை மொழியவில்லை. இவற்றை யோசிக்குமளவில் (தவ வடிவம் பூண்டு கலிப்பகையாருக்குப் பின்னர்த் தன்னனுஜனிடத் தன்பால் உயிர் பெற்றிருந்த) திலகவதியார் பிறந்த பல வருடங்களுக்குப் பின்னரே மருணீக்கியர் பிறந்திருக்க வேண்டுமென்றும், அவ்வம்மையார் மருணீக்கியரைச் சேய்போல் வளர்த்தாரென்றும் அநுமானிக்கலாம். சேக்கிழார் குறிப்பாய்க் காட்டுவதும் மருணீக்கியர் தன் தந்தைக்கு வயது முதிர்ந்த காலத்தில் பிறந்தவ ரென்பதேயாம்.

குறுக்கையர்குடி மாட்சிமை யோங்கப் புண்ணிய மூர்த்திகளாய் விளங்கிய மாதினியார் புகழனார், என்னும் தாய்தந்தையர் தவப்பயனே, தமிழுலகத் தவப்பயனேவெனத் திருநாவுக்கரசு உதித்ததும், அவர் இளம்பிறைச் சந்திரனென வளர்ந்ததும், அம்மகவின் குழவிப் பருவச் செய்கைகளைக் கண்ணுற்றோர் திருக்கரங்களால் எழுதிய ஓலைகள் ஒன்றும் நமக்கு இதுகாறும் கிடைக்கவில்லை. ஆயினும் அவர் * அழகிற் சிறந்தவரென்று அவர் பாசுரங்களில் அனுமானிக்கலாம். இவரிடம் அழகு மாத்திர மன்று, சாந்தம், அன்பு † துணிவு ¶ தூய்மை § முதலியநற்குணங்கள் பிறந்த ஞான்றேஇவருடன் ஜனித்தன. இத்“திருநின்ற செம்மை” சமணராய்த் திரிந்த நாளிலும் மாறாது ஒருமட்குடத்திலுள்ள விளக்கைப்போல் உள்ளொளி வீசிக்கொண்டிருந்தது.

2\. அறுமையிவ் வுலகுதன்னை யாமெனக் கருதிநின்று
வெறுமையின் மனைகள்வாழ்ந்து வினைகளா னலிவுணாதே
சிறுமதி யரவங் கொன்றை திகழ்தரு சடையுள் வைத்து
மறுமையு மிம்மை யாவர் மாமறைக் காடனாரே
—திருமறைக்காடு-திருநேரிசை.—

3\. ஆசைவன் பாசமெய்தி யங்குற்றே னிங்குற்றேனா
னூசலாட் டுண்டு வாளா வுழந்துநா னுழிதராமே
தேசனே தேசமூர்த்தி திருமறைக் காடுமேய
வீசனே யுன்றன்பாத மேத்துமா றருளெம்மானே
—தனித்திரு நேரிசை.—

* தலத்தின்கண் விளங்கியவத் தனிப்பதியி லனைத்துவிழ
நலத்தின்கண் வழுவாத நடைமரபிற் குடிநாப்பண்
விலக்கின்மனை யொழுக்கத்தின் மேதக்கநிலைவேளாண்
குலத்தின்கண் வரும்பெருமைக் குறுக்கையர்தங் குடி
—திருநாவுக்கரசு நாயனார் புராணம்—15. [விளங்கும்

† i ஆராய்ந்தடித் தொண்ட ராணிப்பொனாரூ ரகத்தடக்கிப்
பாரூர் பரிப்பதம் பங்குனி யுத்தரம் பாற்படுத்தா
னாரூர் நறுமலர் நாதன டித்தொண்ட னம்பி நந்தி
நீராற் றிருவிளக் கிட்டமை நீணா டறியுமன்றே
—திருவாரூர் திருவிருத்தம் 2.

[சேக்கிழார் கூற்றை நோக்குக:—
நான்மறைநூற் பெருவாய்மை நமிநந்தி
யடிகடிருத் தொண்டி னன்மை
பான்மைநிலை யாலவரைப் பரமர்திரு
விருத்தத்துள் வைத்துப் பாடித்
தேன்மருவுங் கொன்றையார் திருவாரூ
ரரனெறியிற் றிகழும் தன்மை
யானதிற மும்போற்றி யணிவீதிப்
பணிசெய்தங் கமரு நாளில்.
—திருநாவுக்கரசு நாயனார் புராணம். 227.]

ii ஆமலி பாலு நெய்யு மாட்டியர்ச் சனைகள் செய்து
பூமலி கொன்றை சூட்டப் பொறாததன் றாதை தாளைக்
கூர்மழு வொன்றா லோச்சிக் குளிர்சடைக் கொன்றைமாலை
தாமெனத் தண்டிக் கீந்தார் சாய்க்காடு மேவி னாரே
—திருச்சாய்க்காடு-திருநேரிசை 6

iii குவப்பெருந் தடக்கை வேடன் கொடுஞ்சிலை யிறைச்சி [பாரந்
துவர்ப்பெருஞ் செருப்பால் நீக்கித் தூயவாய்க் கலச மாட்ட
உவப்பெருங் குருதி சோர வொருகணை யிடந்தங் கப்பத்
தவப்பெருந் தேவு செய்தார் சாய்க்காடு மேவி னாரே.
—ஷை. 8

iv அரணிலா வெளிய நாவ லருநிழ லாக வீசன்
வரணிய லாகித் தன்வாய் நூலினாற் பந்தர் செய்த
முரணிலாச் சிலந்தி தன்னை முடியுடை மன்ன னாக்கித்
தரணிதா னாள வைத்தார் சாய்க்காடு மேவி னாரே
—ஷை. 3.

v கல்லினா லெறிந்து கஞ்சி தாமுணுஞ் சாக்கியனார்
நெல்லினார் சோறுணாமை நீள்விசும் பாளவைத்தார்
எல்லியாங் கெரிகை யேந்தி யெழிறிகழ் நட்டமாடிக்
கொல்லியாம் பண்ணு கந்தார் குறுக்கைவீ ரட்டனாரே
—திருக்குறுக்கை-திருநேரிசை 6.

vi நாட்கொண்ட தாமரைப் பூந்தடம் சூழ்ந்தகல் லூரகத்தே
கீட்கொண்ட கோவணங் காவென்று சொல்லிக் கிறி [படத்தான்
வாட்கொண்ட நோக்கி மனைவியொடு மங்கோர் வாணிக
யாட்கொண்ட வார்த்தை யுரைக்குமன் றோவிவ் வக[னை
திருநல்லூர்-திருவிருத்தம் 7. [விடமே

*. அழகியோ மிளையோமெனு மாசையால்
ஒழுகி யாவி யுடல்விடன் முன்னமே
நிழல தார்பொழி னீலக்கு டியரன்
கழல்கொள் சேவடி கைதொழு துய்ம்மினே
—திருநீலக்குடி-திருக்குறுந்தொகை. 8.

†. என்பலாற் கலனுமில்லை யெருதலா லூர்வதில்லை
புன்புலா னறுகாட்டிற் பொடியலாற் சாந்துமில்லை
துன்பிலாத்தொண்டர்கூடித் தொழுதழுதாடிப்பாடும்
அன்பலாற் பொருளு மில்லை யையனை யாறனார்க்கே
—திருவையாறு-திருநேரிசை-6.

¶. ஊனேக்கு மின்பம் வேண்டிய ழலாதே
வானேக்கும் வழி யாவது நின்மினோ
தானேக் குந்தன் னடியவர் நாவினிற்
றேனேக் கும்திரு வெண்கா டடைநெஞ்சே
—திருவெண்காடு-திருக்குறுந்தொகை-3

§. இருளாய உள்ளத்தின் இருளை நீக்கி
இடர் பாவம் கெடுத்தேழை யேனையுய்யத்

4. அப்பர் இளமையில் தென்னிந்தியாவின் நிலைமை

தற்காலத்தியநாகரிகத்தில் மயங்கிக்கிடக்கும்நமக்கு அப்பர் காலத்தில் தென்னிந்தியா வேறொரு காட்டுப் பிரதேசமாகவே காணப்படும். இருப்புப்பாதை மின்தபால்முதலிய நூதனயந்திரங்களின்மைமாத்திரமன்று, ஜனங்களுக்கு எளிதில் கிடைக்கவேண்டிய சிறுசுகங்களும் அக்காலத்திய குடிகள்கண்டிலர். ஓரூரிலிருந்து மற்றொரு ஊருக்குச் செல்வதாயின் கால்நடைப் பாதைகளும் காட்டு வழிகளுமன்றி, கற்சாலைகளும் செம்மண்ணிட்ட பாதைகளும் ஏற்பட்டில. உயர்ந்த நிலையிலுள்ளோர் பல்லக்கேறிச் செல்வர். ஏனையோர் யாதொரு ஊர்தியுமின்றி, நடப்பர். ஊர்களும் காதத்திற்கு இரண்டொன்று காணலாமேயன்றி, இக்காலம் போல் ஊர்களின் நெருக்கம் அக்காலத்தி லில்லை. ஜனத்தொகை மிகவும் குறைவு. இரண்டு ஊர்களுக்கு இடையே வனாந்திரங்களும் திருடர் பயமும் அதிகமாயிருந்தன. அக்காலத்தில் காடு யாவருக்கும் பொதுவாயிருந்ததுடன், ¶ காட்டில் செய்யும் குற்றங்களைத் தண்டிக்க நாட்டில் ஒன்றும் சட்டம் இல்லை. ஆயினும் எவனாயினும் ஒரு ஊர் எல்லையுள் * வருவானாகில், அவனுக்கு யாதொரு தீங்கும் நேர வொட்டாமற் காப்பது அவ்வூரார் கடமையாகும். ஒவ்வொரு ஊரும் ஒரு விதத்தில் ஒருசிறு ராச்சியமாகவும் ஒருவிதத்தில் ஒரு பெரியகுடும்பம் போலும் விளங்கும். கோயில்களின் கோபுரங்கள் அதிக உயரமாய் ஏற்பட்டு அதில் விளக்கு வைப்பதற்குக் காரணம்,காட்டின் வழியேவரும் வழிப்போக்கர்களை விளிப்பதற்கே. கோபுரதீபத்தைக் கண்டபோதே வழிப்போக்கன் இங்குப் பயமற்ற தங்குமிடமும், உணவும், கிடைக்குமென்று அத்திசைநோக்கிச் செல்வன். அத்தகைய கோபுரங்களமைந்த திருக்கோயிலில்லாதவூர் காடென்பர் †. அரசாட்சி நாட்டைச் சார்ந்ததன்றி காட்டைச் சார்ந்த தன்று.

தமிழ் நாட்டு அரசாட்சி சேர சோழ பாண்டிய ரென்னும் மூவேந்தராட்சி யென்பர். இம் மூவேந்தராலும் ஒருவரையொருவர் பகைத்திருப்பது பெரும்பாலும் வழக்கமே யன்றி, அன்னியோன்யமாய்ப் பலகால மிருந்ததாய் எந்த நூற்றாண்டிலும் யாதொருஅத்தாட்சியுமில்லை. மணவினையால் இரண்டு அரசர்களுக்குச் சிலகாலம் நட்பு நேரும். அப்பர் காலத்திய பாண்டிமா தேவி சோழன் மகள் *. பக்தியால் மூவேந்தரும் சுந்தரமூர்த்தி நாயனாரை ஒருங்கு சேர்ந்து வழிபட்டதுண்டு †. ஆயினும் இம்மூவேந்தரும் ஒருவரையொருவர் பல காலம் அன்புடன் நேசித்தா ரென்பதற்கு யாதொரு அடையாளமும் காணப்படவில்லை.

தமிழ் நாட்டு மூவேந்தரிடையே உண்டாயிருந்த குழப்பங்கள் மாத்திர மல்ல. அவர் ஆட்சியினுட்பட்டவர்களாய் எண்ணப்பட்ட சிற்றரசர்கள் பலர் தாங்களே சக்ரவர்த்தியாகவும் அப்போதைக்கப்போது முயல்வர். அத்தகைய அரசர்களில் ஒருவன் பல்லவன். தொண்டை மண்டலம் பெரும்பாலும் இவன் ஆட்சிக்குட்பட் டிருந்தது. தமிழ் நாட்டுக்கு வடக்கில் உள்ள வடுகர்கள் ‡ தமிழ் நாட்டு வளமை கண்டு படையுடன் வருவதும் அவர்களைப் பொருது துரத்துவதும் தமிழ் நாட்டு வேலையாயிருந்தது. அரசர் பேதமும், அயலார் பிரவேசமும் தேசத்தைக் குழம்பச் செய்யு நாளில் ஒரு மனதாய்ச் சிவனை வழிபடும் மன்பதைகளுக்குப் பேதங்கள் உண்டாகுமாறும் ஒற்றுமை நீங்கவும், சமணம் பௌத்த மென்னும் மதங்கள்புகுந்து அரசர்களையும் அறநெறிநீக்கிப் புறச்சமயிகளாய்ச் சைவ சனங்களை வருத்தலாயின.

தெருளாத சிந்தைதனைத் தெருட்டித் தன்போற்
சிவலோக நெறியறியச் சிந்தை தந்த
அருளானை யாதிமா தவத்து ளானை
யாறங்க நால்வேதத் தப்பால் நின்ற
பொருளானைப் புள்ளிருக்கும் வேளூ ரானைப்
போற்றாதே யாற்றநாள் போக்கி னேனே
—திருப்புள்ளிருக்கும் வேளூர்-திருத்தாண்டகம்4.

¶ தானகங் காடரங்காக வுடையது தன்னடைந்தார்
ஊனக நாறு முடைத்தலை யிற்பலி கொள்வதும் தான்
தேனக நாறுந் திருவொற்றி யூருறை வாரவர்தாம்
தானகமே, வந்து போனகம் வேண்டி யுழிதர்வரே
—திருவொற்றியூர்-திருவிருத்தம். 4.

* வில்லைக் காட்டி வெருட்டி வேடுவர் விரவலாமை சொல் [லிக்
கல்லி னாலெறிந் திட்டு மோதியும் கூறைகொள்ளு மிடம்
முல்லைத் தாது மணங்க மழ்முருகன் பூண்டி மாநகர்வாய்
எல்லைக் காப்பதொன் றில்லை யாகினீர் எத்துக்கிங் கிருந் [தீரெம் பிரானீரே ?
—சுந்தரர். திருமுருகன் பூண்டித்திருப்பதிகம் 2.

† திருக்கோயி லில்லாத திருவி லூரும்
திருவெண்ணீ றணியாத திருவி லூரும்
பருக்கோடி பத்திமையாற் பாடாவூரும்
பாங்கினொடு பலதளிக ளில்லாவூரும்
விருப்பொடு வெண்சங்க மூதாவூரும்
விதானமும் வெண்கொடியு மில்லாவூரும்
அருப்பொடு மலர் பறித்திட் டுண்ணாவூரும்
அவையெல்லா மூரல்ல வடவி காடே
—தனித்திருத்தாண்டகம்-5.

*. மங்கையர்க் கரசி வளவர்கோன் பாவை
வரிவளைக் கைம்மட மானி
பங்கயச்செல்வி பாண்டிமா தேவி
பணிசெய்து நாடொறும் பரவப்
பொங்கழ லுருவன் பூதநா யகனால்
வேதமும் பொருள்களு மருளி
அங்கயற் கண்ணி தன்னொடு மமர்ந்த
வாலவா யாவது மிதுவே
—சம்பந்தர். திருவாலவாய்.பண்-புறநீர்மை. 1.

†. அடிகே ளுமக்காள் செயவஞ் சுதுமென்
றமரர் பெருமானை யாரூர னஞ்சி
முடியா லுலகாண்ட திவேந்தர் முன்னே ।। [யும்
மொழிந்தாறு மோர்நான்கு மோரொன் றினை
படியா விவைகேட்க வல்லவ டியார்
பரங்குன்ற மேய பரமன டிக்கே
குடியா கிவானோர்க்கு மோர்நோவு மாகி
குலவேந்த ராய்விண் முழுதாள் பவரே
—சுந்தரர்-திருப்பரங்குன்றம் திருப்பதிகம். 11.

‡. (i) கன்னிதிருத் தாதையார்
மணமிசைவு கலிப்பகையார்
முன்னணைந்தா றறிவிப்ப
வதுவைவினை முடிப்பதன்முன்
மன்னவர்க்கு வடபுலத்தார்
மாறேற்க மற்றவர்மேல்
அன்னவர்க்கு விடைகொடுத்தா
னவ்வினைமே லவரகன்றார்

(ii) வேந்தற்குற் றுழிவினைமேல்
வெஞ்சமத்தில் விடைகொண்டு
போந்தவரும் பொருபடையு
முடன்கொண்டு சிலநாளிற்
காய்ந்தசினப் பகைப்புலத்தைக்
கலந்துகடுஞ் சமர்க்கடலை
நீந்துவார் நெடுநாள்க
ணின்றைவெம்போர்த் துறைவிளைத்தார்
—திருநாவுக்கரசு நாயனார் புராணம் 24 & 25.

தமிழ்ப் பாடம் 54.

[நளவெண்பா.]

கலிநீங்கு காண்டம்.

கானகத்தில் காதலியை நீத்துப் பிரிந்த நளனுக்கு உற்றதை இனிப் புகழேந்தி சொல்ல ஆரம்பிக்கின்றார்.

மன்னா வுனக்கபய மென்னா வனத்தீயில்
பன்னக வேந்தன் பதைத்துருகிச்—சொன்ன
மொழிவழியே சென்றான் முரட்கலியின் வஞ்சப்
பழிவழியே சென்றான் பார்த்து. 3.

ஆருந் திரியா வரையிருளி னங்ஙனே
சோர்குழலை நீத்த துயரோடும்—வீரன்
திரிவானத் தீக்கானிற் செந்தீயின் வாய்ப்பட்
டெரிவானைக் கண்டா னெதிர். 4.

தீக்கடவு டந்த வரத்தைத் திருமனத்தில்
ஆக்கி யருளா லரவரசை—நோக்கி
அடைந்தா னடைதலுமே யாரழலோ னஞ்சி
உடைந்தான்போய்ப் புக்கா னுவந்து. 5.

சீரியாய் நீயெடுப்பத் தீமை கெடுகின்றேன்
கூருந் தழலவித்துக் கொண்டுபோய்ப்—பாரில்
விடுகென்றான் மற்றந்த வெந்தழலால் வெம்மைப்
படுகின்றான் வேல்வேந்தைப் பார்த்து. 6.

என்றுரைத்த வவ்வளவி லேழ்கடலுஞ்சூழ்கடலும்
குன்றுஞ் சுமந்த குலப்புயத்தான்—வென்றி
அரவரசைக் கொண்டகன்று ஞாணியந் தன்னில்
இரவரசை வென்று னெடுத்து. [முதல் 7.

மண்ணின்மீ தென்றன்னைநின் வன்றாளா லொன்று
எண்ணித் தசவென் றிடுகென்றான்—நண்ணிப்போர்
மாவலான் செய்த வுதவிக்கு மாறாக
ஏவலாற் றீங்கிழைப்பே னென்று. 8.

ஆங்கவன்று னவ்வா றுரைப்ப வதுகேட்டுத்
தீங்கலியாற் செற்ற திருமனத்தான்—பூங்கழலை
மண்ணின்மேல் வைத்துத் தசவென் றுவாய்மையால்
என்னினான் வைத்தா னெயிறு. 9.

இவ்வேழு செய்யுள்களையும் நாம் பாடத்திற்கு எடுத்துக் கொள்ளவில்லை. ஆதலால் பாட்டை மாத்திரம் போட்டோம். இவைகளில் அடங்கிய விஷயம் பின்வருமாறு:—தமயந்தியை விட்டுப்பிரிந்த துயரத்தினோடு நளன் காட்டுவழியே போனபோது அங்குப் பற்றி எரிந்திருந்த வனத்தீயிலிருந்து, "மன்னனே, உனக்கு அபயம்" என்று யாரோ தன்னுதவிவேண்டி அழைக்கின்றகுரல் கேட்டவுடன் திரும்பிப்பார்க்கப் பாம்பொன்று அத்தீயினகப்பட்டுத் துடிப்பதைக் கண்டான். தன் குறைகளைப் பற்றிச் சிறிதும் நினைக்காமல் மற்றவர்களுக்கு உண்டான கஷ்டங்களை மிக்க விரைவுடனே நீக்கக் கருதுகின்ற உத்தமன் ஆனதால் இந்நளன், பாம்புதானே என்றுகூடப் பாராமுகமாயிராமல், காட்டுத் தீக்குள் குதித்து அந்தப் பாம்பை வெளியிற் கொணர்ந்தான். வந்தவுடன் அப்பாம்பு நளனை நோக்கி, "ஒன்றுமுதல் பத்துவரையிலும் எண்ணி என்னைத் தரையில் விடுவாயாக" என்று சொல்ல, நளன் அவ்வாறே வடமொழியில் எண்ணித் 'தச' வென்று கீழேவிட்டான். உடனே அந்தப் பாம்பு அவனைக் கடித்து விட்டது. பாம்பிற்கு இவனைக் கடிக்க வேண்டும் என்னும் உத்தேச மிருந்தது. ஆனால் கடிப்பதற்கு ஏதாவதொரு நிபம் வேண்டுமே என்று அது செய்த தந்திரம் இது. தச, என்பதற்கு ஸமஸ்கிருதத்தில் பத்துஎன்ற ஒருஅர்த்தமும் கடி என்ற வேறொரு அர்த்தமும் இருக்கின்றன. பத்துஎன்ற அர்த்தத்தில் அடிஎண்ணிய நளன் தசஎன்றுவைக்க இப்பாம்பானது மற்றப்பொருளைக் கொண்டதுபோல் பாவித்து, "நீதானே என்னைக் கடிக்கச் சொல்கின்றாய். ஆனால் கடிக்கின்றேன்" என்ற கருத்தால் கடித்தது. கடித்தவுடன் நளனது உடலும் உருவமும் அவ்விஷத்தீயினால் அடைந்த வேறுபாட்டைப் புகழேந்தி அடுத்த செய்யுளிற் கூறுகின்றார்.

வீமன் மடந்தை விழிமுடியக் கண்டறியா
வாம நெடுந்தோள் வறியோருக்—கேமம்
கொடாதா ரகம்போற் குறுகிற்றே மெய்ம்மை
விடாதான் றிருமேனி வெந்து 10.

பதப்பிரிவு:—வீமன் மடந்தை விழி முடிய கண்டு அறியா வாமம் நெடும் தோள் வறியோருக்கு ஏமம் கொடாதார் அகம்போல் குறுகிற்றுஏ மெய்ம்மை விடாதான் திரு மேனி வெந்து.

அன்வயம்:—மெய்ம்மை விடாதான் திருமேனி வெந்து, வீமன் மடந்தை விழிமுடியக் கண்டுஅறியா வாமநெடுந்தோள், வறியோருக்கு ஏமம் கொடாதார் அகம்போல் குறுகிற்றே.

பதவுரை

மெய்ம்மை - சத்தியத்தை
விடாதான் - விடாதவனாகிய நளனது
திரு - அழகிய
மேனி - சரீரம்
வெந்து - விஷாக்கினியில் வெந்து,
வீமன்-வீமராஜனுக்கு
மடந்தை - மகளாகிய தமயந்தியும்
விழி - (தனது பெரிய) கண்களால்
முடிய - முற்றிலும்
கண்டு - பார்த்து
அறியா - அறிந்திராத
வாமம் - அழகிய
நெடும் - அகன்ற
தோள் - (நளனது) தோள்கள்,
வறியோருக்கு - தரித்திரர்க்கு
ஏமம் - பொன்னை
கொடாதார் - கொடுக்காதவருடைய
அகம்போல - அகத்தைப்போல
குறுகிற்றே - குறுகிவிட்டனவே.

விரிவுரை:—பாம்பின் விஷம் மண்டினதால் நளனது உடல் வெதும்பிக் கறுகிக் குறுகிப் போயிற்று என்பது இச்செய்யுளின் கருத்து. இதை நினைத்துக் குறுகிற்றே,என்று இரக்கப்பொருளில் ஏகாரஇடைச்சொல் கொடுத்துக்கவியும் மனம்வருந்துகிறார். உடல் வெந்ததால் தோள்களும் குறுகின. பலநாள் இத்தோள்களோடு பழகியிருக்கின்ற தமயந்தியும் அவைகளின்அழகையும் அகலத்தையும் முழுவதும் கண்டதில்லை என்றால் அவைதம் பெருமையைச் சொல்லவும் வேண்டுமோ!

இவ்வளவு பெருமையோடும் அழகோடும் வளர்ந்த தோள்கள் ஒருநொடியில் குறுகித்தேய்ந்து போதற்கு ஓர் உதாரணம்காட்டவந்த கவி, வறுமையுற்றவர்களுக்குப் பொன்னும் பிறபொருளும் கொடுத்துக் காக்காதவர் குறைந்து கெடுகின்றார் என்பதைப் பிரத்தியக்ஷமாகப் பாராட்டி எடுத்து அமைத்துக்கொள்கின்றார். அகம் என்ற சொல்லிற்கு வீடு என்றும், மனம் என்றும்,இரண்டுஅர்த்தங்கள் இருக்கின்றன.அவ்விரண்டு அர்த்தத்திலும் வறியோர்க்கு ஒன்றும் கொடுக்காத உலோபிகளது அகம் குறுகும்.ஒருவருக்கும் உதவாத உலோபி நெடுநாள் வாழமாட்டான். அவன் வீடும் குடியும் செல்வமும் பெருகாமல் தேய்ந்து குறுகிப்போம். ஏழைகள் துன்பப்படுவதைப் பார்த்திருந்தும் அவர்களுக்குப் பொருள்கொடுத்துக் காக்காதவன் மனமானது வரவரக் குறுகிக் குறைந்துவிடும். மற்றவர்களுக்குக் கொடுத்துக்கொடுத்துப் பழகுகின்றவன் மனந்தான் மேன்மேலும் விசாலமடையும். இந்தச் சந்தர்ப்பத்தில் புகழேந்தி லோபிகளிடத்தில் தனக்கிருக்கும் வெறுப்பைத் தெரிவித்துக் கொள்கின்றார்.

ஆற்ற லரவரசே யாங்கென் னுருவத்தைச்
சீற்ற மொன்றின்றிச் சினவெயிற்றால்—மாற்றுதற்கின்
றென்கா ரணமென்று னேற்றமரிற் கூற்றழைக்கு
மின்கா லயின்முகவேல் வேந்து. 11.

பதப்பிரிவு:-ஆற்றல் அரவு அரசே ஆங்கு என் உருவத்தை சீற்றம் ஒன்று இன்றி சின எயிற்றால் மாற்றுதற்கு இன்று என்காரணம் என்றான் ஏற்று அமரில் கூற்று அழைக்கும் மின் கால் அயில் முகம் வேல் வேந்து.

அன்வயம்:-ஏற்று அமரில் கூற்று அழைக்கும் மின் கால் அயில்முகம் வேல் வேந்து, "ஆற்றல் அரவு அரசே, இன்று சீற்றம் ஒன்று இன்றிச் சின எயிற்றால் என் உருவத்தை ஆங்கு மாற்றுதற்குக் காரணம் என்?" என்றான்.

பதவுரை.

ஏற்று-பகைவரை ஏற்று
அமரில்-யுத்தத்தில்
கூற்று - எமனை
அழைக்கும் - (இவருயிர்களைக்கொண்டுபோக வா என்று) அழைக்கும்
மின் - பிரகாசத்தை
கால் - வீசுகின்ற
அயில் - கூர்மை பொருந்திய
முகம் - முனையை உடைய
வேல் - வேலை ஏந்திய
வேந்து - அரசனாகிய நளன்,
"ஆற்றல் - வலிமையுடைய
அரவு - பாம்புகளுக்கு
அரசே - தலைவனே,
இன்று - இப்பொழுது
சீற்றம் - என்மீது கோபத்திற்குக் காரணம்.
ஒன்று - சிறிதும்
இன்றி - இல்லாமல்
சின - உன்னுடைய கோபம் பொருந்திய
எயிற்றால் - பல்லினால் (கடித்து)
என் - என்னுடைய
உருவத்தை - உருவத்தை
ஆங்கு - அவ்விதம்
மாற்றுதற்கு - மாற்றி விடுவதற்கு
காரணம் - காரணம்
என் - என்ன?"
என்றான் - என்று கேட்டான்.

விரிவுரை:—ஒவ்வொரு சிறு சொல்லிலும் ஒவ்வொரு சிறு செயலிலும் நளன் தன் பெருந்தன்மையைக் காட்டுகின்றான். தன் துயரோ மலையளவு இருப்பினும் தீயிலும் புகுந்து ஒரு பாம்பைக் காப்பாற்றுகின்றான். அப்பாம்போ அதற்கு மாறாக அவனைக் கடித்துவிட்டது. ஆயினும் "அட துஷ்டா, உனக்கு உபகாரஞ்செய்த என்னைக் கடித்தமட்டில் உன்னை விட்டேனா, பார்!" என்று கோபம் பொங்கி அதனைக் கொன்றானல்லன். 'அமரில் கூற்று அழைக்கும்' வேலானுக்கு இப்பாம்பை வேண்டுமென்றால் ஒரு நொடியில் நசுக்கிப் போட்டிருக்க முடியும். ஆனாலும் அது செய்யவில்லை. தன்னைப் பாம்பு கடித்து விஷம் மண்டுவதைக் கண்டிருந்தும் தனக்கு அது தீங்குசெய்யக் கருதிக் கடித்ததாக அவன் அவசரப்பட்டு நினைக்காமல், தன்னைக் கடித்ததற்குத் தக்க காரணம் ஏதேனும் இருக்கவேண்டுமென்றே நிச்சயித்து அது என்னவென்று சாந்தமாக வினவுகின்றான். மெய்யறிவும் நற்குணமும் வாய்ந்தவர்கள் எவரும் பிறர் தமக்கு எக்காலத்திலும் தீங்கு இழைப்பாரென எண்ணமாட்டார். உத்தமர்களில் உத்தமனான நளன் பாம்புகூடத் தனக்குத் தீங்கு செய்ததென்று கடித்த பின்னும் நினைக்கவேண்டுமென்று கூட நினைக்கவில்லை. மேலும், மேன்மக்கள் தாங்கள் செய்த உபகாரத்தை ஒரு பொருளாக மதிக்கமாட்டார்களாகையால், "நானுனக்கு உபகாரஞ் செய்திருக்க நீயேன் கடித்தாய்" என்று கேட்காமல், "நானுனக்குத் தீங்கொன்றும் கோபமூட்டும்படி செய்யாமலிருக்கவும், கடித்ததன்காரணம் என்ன"வென்றே கேட்கின்றான்.

குறிப்பு:—ஆற்றல் அரவு:—என்றதொடர் ஆற்றலை உடைய அரவு, என்று விரியும். ஆகையால் இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை. ஐ, என்பது உருபு. உடைய என்பது இங்குப் பயன். உடைய என்பது வந்திருப்பதால் ஆறும் வேற்றுமையோ, என்று எண்ணப்படாது. உடைய என்பது ஆறும் வேற்றுமைக்கு உரிய சொல்லுருபு ஆவது உண்மைதான். மரத்தினுடைய கிளை, என்னும்போது உடைய ஆறும் வேற்றுமையையே காட்டும். ஆனால், 'மரவாள்' என்றது 'மரத்தை அறுக்கும் வாள்' என்று விரியும்போது ஐ என்ற இரண்டாம் வேற்றுமை உருபும் 'அறுக்கும்' என்ற வார்த்தை பயனாகவும் தொக்கிருப்பது போலவும், 'பணப்பெட்டி' என்பது பணத்தை வைக்கும் பெட்டி என்று விரிவதால், ஐ என்ற உருபும் 'வைக்கும்' என்ற பயனும் தொக்கிருப்பது போலவும், 'ஆற்றல் அரவு' என்பதிலும் (ஆற்றலை உடைய அரவு) தொக்கு இருக்கின்ற உருபு ஐ என்னும் இரண்டாம் வேற்றுமை உருபுதான். இங்கு உடைய என்பது முன் உதாரணங்களில் வந்த 'அறுக்கும்', 'வைக்கும்' என்பனவற்றைப்போல் அர்த்தத்தைப் பூர்த்திசெய்ய வந்த பயனே அல்லாது ஆறும் வேற்றுமைச் சொல்லுருபு அன்று. ஆகையால் உடைய, என்பது வந்தவுடன் அவசரப்பட்டு ஆறும் வேற்றுமை என்று எண்ணிவிடக்

கூடாது. அது உருபாக மாத்திரம் வந்திருக்கின்றதா, அல்லது வேறு உருபோடு சேர்ந்து பயனுக வந்திருக்கின்றதா என்பதைக் கவனிக்கவேண்டும். உருபாக வருமானுல் ஆரும் வேற்றுமை, பயனுகவருமானுல், வேற்றுமை உருபு வேருக இருக்கும்.

அரவு அரசே:—அரவுகளுக்கு அரசே, என்று விரியுமாகையால், அரவு என்பது நான்காம் வேற்றுமைத் தொகை.

அரசே:— கூப்பிடுகின்றபடியால் எட்டாம் வேற்றுமை.

உருவத்தை = உருவம் + அத்து + ஐ. ஐ என்ற இரண்டாம் வேற்றுமை உருபு, விரிந்து வந்திருக்கின்ற படியால் இரண்டாம் வேற்றுமை விரி. அத்து என்பது சாரியை. ம் என்ற எழுத்தில் முடிகின்ற வார்த்தைகளெல்லாம் வேற்றுமை உருபு ஏற்கின்ற போது அத்து என்னும் சாரியை பெறும் என்பதை முன் (முதல் வால்யூம். 706 வது பக்கம்) சொல்லியிருக்கின்ரும்.

சிற்றம்:—முதல் வேற்றுமை

ஒன்று:—முதல் வேற்றுமை

சின எயிற்ருல்:—சினத்தை உடைய எயிற்ருல், என்று விரியும் ஆகையால் இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை.

எயிற்ருல்:—மூன்ரும் வேற்றுமை விரி. ஆல் உருபு இருக்கின்றது.

மாற்றுதற்கு:— நான்காம் வேற்றுமை விரி. கு, உருபு இருக்கின்றது.

காரணம்:—முதல் வேற்றுமை.

அமரில்:—ஏழாம் வேற்றுமை விரி. இல் உருபு வந்திருக்கின்றது.

கூற்று அழைக்கும்:—கூற்றை அழைக்கும் என்று விரியுமாகையால், இரண்டாம் வேற்றுமைத் தொகை. ஐ உருபு மாத்திரந்தான் தொக்கிருக்கின்றது.

மின்கால்:—மின்னலை—இரண்டாம் வேற்றுமைத் தொகை.—(கால் என்பது இங்கே வினைச்சொல், வீசுகின்ற என்பது பொருள்.)

அயில் முகம்:—அயிலை உடைய முகம்:—இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை.

முகவேல்:—முகத்தை உடைய வேல்:—இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை. ஆற்றலை உடைய அரவு, என்பதுபோல் இங்கும் உடைய என்பது பயன்.

வேல் வேந்து:—வேலை ஏந்திய வேந்து:-இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கதொகை.

இவ்விதமே நாலைந்து செய்யுள்களை நீங்களாக எடுத்துக்கொண்டு அவைகளில் வருகின்ற பெயர்ச்சொற்கள், என்ன வேற்றுமையிலிருக்கின்றவென்றும், தொகையா விரியா என்றும் பார்த்துப் பழகிக்கொள்வது நலம்.

EPICTETUS.

எபிக்திதன்.

"I was Epictetus, a slave and maimed
in body, and a beggar for poverty,
and dear to the immortals."

சற்றேறக் குறைய, கி. பி. 50-ம் ஆண்டில், பிரிஜியாவிலுள்ள ஹிரோபொலீஸில், ஓர் மிக்க எளிய குடும்பத்தில் பிறந்தவர் எபிக்திதன் என்ற ரோம வைராக்கிய தத்வக்ஞர். இவர் இளம்பிராயத்தில், தன் பெற்ரோரால் ஒரு குரூபிக்கு அடிமையாக விற்கப்பட்டுக் கேட்பதற்குமியலாத கணக்கற்ற துன்பங்களுக் குள்ளாக்கப்பட்ட போதிலும், தூய ஆன்மாவும் மெய்ஞ்ஞானமும் பொருந்தியவராதலால் அவைகளைப் பொறுத்து, அக்கால அத்தேசத்து வழக்கப்படி இடையில், கேயஸ் மூஸோனியஸ் ரூபஸ் என்ற பிரசித்திபெற்ற வைராக்கிய ஞானியிடஞ் சென்று, தத்வ விஷயங்களை ஐயந்திரிபறக் கற்றனர்.

சுதந்தரமும் அடிமைத்தனமும் ஒருவனுடையஉள்ளத்தினமைப்பைப் பொறுத்துள; நிர்மல சிந்தையன், உண்மையில் அடிமை யல்லன். பொருட் செல்வத்தால் தேகம் இழிவதுபோல், துர்க்குண நடைத்தைகளால் ஆன்மா சீர்கெடுகின்றது. தனம் செல்வாக்கு சுகபோகங்களை உடைத்தாயிருப்பினும், சிறுகிய அறிவும் குறுகிய உள்ளமுமுடையவன் அடிமையே; லௌகீக வாழ்க்கைக்கு ஆனவைகளைச் சிறிதும் பெற்றிராவிடினும் விசால அறிவும், உயரிய சிந்தையும் ஆழ்ந்த நோக்கமும் உடையனுபின், இவனே சுதந்திரபுருஷன். நமக்குப் புறத்தே நிகழும் அற்பங்களைக் கவனித்து, மனம் புழுங்கிக் கடவுளையும், பிரபஞ்ச முறையையும் தூற்றுதல் மதிக்குறைவே. இடம்-காலம் - பிறப்பு-வறுமை-நோய்-பல்வேறு இடையூறிடுக்கண்களால் பாதிக்கப்படுகையில், உள்ளத்தைக் கடவுள்மீது உயர்த்தி, எல்லாம் அவனுடைய செயல்களெனக்கொண்டு, கலங்காதிருத்தலே தெய்விகக் குணம். வைத்திருப்பது தேளும் சிலந்தியும் சர்ப்பமும் என்ருல், பெட்டி தந்தமானுலென்ன, தங்கமானுலென்ன? அவை தங்கியிருக்கும் இடத்தைக் கவனியாது, குணத்தையே அறிந்து அவைகளை ஒதுக்குவதுபோல், இடம் காலம் சந்தர்ப்பங்களெவையானுலும், செல்வர்களும் அதிகாரிகளும் வேஷதாரிகளும், அப்பிராணிகளையொத்தவரெனக் கொண்டு, அவர்களுடைய செல்வம் அதிகாரம்ஆடம்பரங்களில் தன்மனதைப்புகுத்தி மருளாதவனே அறிஞன். நற் சாதனங்களுள் பொருட்செல்வம் ஒன்றன்று. தீமைகளுள் முதன்மையானது வீண் படாடோபம். அகத்தூய்மையும் வாய்மையும் நேர்மையும் உடையவனை இருட்டறைகளும் கொடுஞ்சிறைச்சாலைகளும் அச்சுறுத்தா, இருப்புச் சங்கிலிகள் கட்டுப்படுத்தா, கொடிய தண்டனைகள் அடக்கா. மாணபயம் அணுகி இழிவு படுத்தாது; எந்நிலையிலும் சீரியன்சீரியனுகவே திகழ்வன். அகச்சாந்தியும், திருப்தியும் உற்றவனே மேலோன். புஜபலசாலிகளைவிட மிக்க சிறந்தவன் நிர் அகங்காரி; நாடுகளையும் அரண்களையும் தகர்த்து வெற்றியடைபவனைவிட மேலானவன் புலன்களை வென்று ஆன்ம திருப்தி யுற்றவன். பிரபஞ்சமாகிய அரங்க மேடையில், பின்புறம் ஒளிந்து நிற்கும் சூத்திரக்காரனுன இறைவனுல் நாம் ஒவ்வொருவரும் ஒவ்வோர் விதத்தில் ஆட்டப்படுகின்ரேம்; ஆதலால், ஒரு வேஷத்தை மதித்து, மற்ற நடனத்தை அவமதித்து விடுக்காது,

எவ்வேஷத்தையும், எந்நடனத்தையும், முகஞ் சுளிக்காமல் ஏற்று நிஷ்கபடமாய் நேர்மையுடன் ஒழுங்குபட, மூலப்பொருளின் ஆக்ஞை இதுவெனத் தேர்ந்து ஆடிச் செல்லவேண்டும். இக்கொள்கைகளை நம்பியும் போதித்தும் எள்ளளவேனும் பிறழாது அநுசரித்து ஒழுகிய உத்தமர் இவர். அகத்தூய்மைக்கும், ஆன்மப் பிரகாசத்திற்கும் பிர்ம்மசரியமே இன்றியமையாததெனு இவர் கொண்டவரானுலும், மணவாழ்க்கையையும் இல்லறத்தையும் வெறுத்தவரல்லர். இல்வாழ்க்கையினின் றுண்டாகும் கஷ்ட நஷ்டங்களைப் பன்முறை விஸ்தரித்தபோதிலும், அகந்தையும் பகட்டு மினுக்கும் சலனபுத்தியும் மிக பூரித்துள்ளவர் பெண்பாலர் எனக் காட்டினுரானுலும், அவர்களை முற்றிலும் தூஷித்து ஒதுக்கியவரு மல்லர்.

ஒற்றைப் பாயும் தற்செயலாய்க் கிடைத்தவொரு இரும்பு விளக்குமல்லாது வேறு உடைமையின்றி ஒரு குடிசையில் இவர் வசித்துவருகையில், ஒருநாளிரவில், திருடன் புகுந்து, அவ்விளக்கைக் கவர்ந்து சென்றதை அறிந்தபொழுது, இவர் "மீண்டும் ஓர்முறை அக்கள்ளன் வருவனுயின், வருந்துவன்; ஏனெனில், மண் விளக்கே இனி அவனுக்குக் கிடைக்கும்." என்ருர். நீயருக்கு இவர் உபகரித்து வந்ததைச் சிலர் கண்டு, குறை கூறியபொழுது, "அத்தீயர்களை யன்று, ஆனுல், அவ்வுருத் தரித்துவந்த மானுடத் தன்மையை, அதாவது பதுங்கிக்கிடக்கும் மெய்ந்நன்மையையே கௌரவித்து உபகரிக்கின்றேன்" என்ருர். இவைகளினின்று இவருடைய வாணுள் கழிக்கப்பட்ட விதத்தையும் உள்ளத்தினமைப்பையும் ஒருவாறு அறியலாம்.

இவருடைய சிஷ்யனுன ஆறியன் (Arrian) என்றவனுல் இவருடைய உபதேசங்களும், சம்பாஷணைகளும் திரட்டப்பட்டுப் புத்தகங்களாகப் பின் பிரசுரிக்கப்பட்டன. அவைகளை அடியிற் கண்டவாறு சுருங்கக் கூறுவோம். இனிப் போதிப்பது எபிக்திதன், உற்றுக்கேண்மின்:—

ஒன்றையும் மிதமீறி இச்சியாதே. புற விஷயங்களும் நிகழ்ச்சிகளும் உன் கருத்து நிறைவேறுதற்கு இடையூறுகளை விளைக்குமானுல், பச்சாதாபக் குட்டையில் அழுத்தி, அலருது, அவைகளின் போக்கின்படிக்கு, உன்னைத் திருத்தி மாற்றி வெல்வாய். இழந்த பொருள்களை இழந்துவிட்டதாகப் பாவியாதே; அவைகள் ஜகத்பிதாவின் உடைமைகளெனத் தேர்ந்து, அவைகளை அவனிடமே திருப்பி ஒப்புவித்துவிட்டதாக எண்ணுவாய். மானபங்கத்தையும் நிந்தை மொழிகளையும், அகௌரவமும் பழிப்புரையுமெனக் கொள்வதினின்றே சஞ்சலமும் பழிதீர்க்க வேண்டுமென்ற உக்கிர எண்ணமும் உண்டாகின்றன.

தெய்வங்கள் பிழை யிழைக்கா; அவைகளினின்று மானுடர்க்கு எத்தீமையும் விளையா என்பதை நம்பி, அவைகளை உன் இஷ்டப்படிக்கு ஸ்துதிப்பதையும் தூற்றுவதையும் விடுப்பாய்.

உன்னுடைய சத்துரு உன் உள்ளேயே யுளன் என்பதை அறிந்து, சதாகாலமும் உள்ளாராய்ச்சி செய்து, கழிப்பன கழித்து, ஏற்பன ஏற்றுத் திருத்துவன திருத்தி, மாற்றுவன மாற்றி உய்வாயாக. நன் முயற்சிகளையும் நல்லப்பியாசங்களையும் எஞ்ஞான்றும் கைவிடாதே. சதாகாலமும், மேலடைந்து பூரண நிலைமையி லமர நிச்சயித்து உழைப்பாய்.

ஈசன் ஒருவன் உளனே? சிருஷ்டியில் முறைமையுளதோ? ஈசன் இல்லை யென்பார் ஒரு சாரார்! சர்வ சக்தியும் அருளும் பொருந்தப் பெற்றவனல்லன் என்பர் மற்ருேர் சாரார்! உண்மை யாதோ? அந்தோ! கடவுள் கருணையை மறுப்பவர், ஈசன் சக்தியை நிராகரிப்பவர், எவர்? கண்ணை யளித்தவன் காட்சிப்பொருள்களையும் படைத்துளான். கண்ணில்லையாயின், அப் பொருள்களின் கருத்து என்னையோ? செயற்கை உலகினில் ஆக்கப்பட்ட பொருள், ஆக்கியோனது இருப்பையும், அறிவையும், பொருளின் உபயோகத்தையும் நிரூபிப்பனபோல், ஒளியையும் ஒளியையுணர்ந்து மகிழ நேத்திரங்களையும் கொடுத்து உதவியவன் உதவுபவன் ஒருவன் உளன் என்பது திண்ணம் ஆக வில்லையோ? சிறு விதை மரமாக உயர்தலும், புல்லினின்று பால் பொங்குவதும், ஒரு சிறு துளியானது மிகப்பெரிய கலைஞானியாகப் பரிணமித்துத் திகழ்வதும் என்ன ஆச்சரியம்! இவைகளுக்குக் காரணம் என்னை? வெட்கங் கெட்டவனே, மதிமயங்கிப் பிதற்ருதே, உன் ஒப்புயர்வற்ற அறிவை அவிக்காதே! உலகாதிகளின் சிறப்பையும், ஒற்றுமையையும், ஜகதீசனின் கிருபையையும் ஊகித் தறிந்துணர்தற்கான மனம் பெற்ற மாநுடனே, இப்பெருங் கொடையைக் கொண்டு, அப்பரம்பொருளை பிதாவை ரக்ஷகனை இறைவனை, அநுதினமும், ஒவ்வொரு விநாடியும், வாழ்த்துவாயாக!

புத்தி உள்ளம் ஆன்மா எனவுங், உட்சோதி அகச்சக்தி அந்தரான்மா எனவும், அழைக்கப்படுவன அப்பரம்பொருளின் பாகம் அல்லது அம்சமே என்பதை மறவாதே! ஜடபூமியின் புத்திர னல்லன் நீ, ஜகத் பிதாவின் மைந்தனுவாய். தெய்வ ஒளியின் ரேகைகளில் ஒன்று நீயன்றே? உனக்கும் உள்ளும் புறமும் ஒளிரும் தூல்லிய தூரிய வஸ்து கற்பிதப் பொருளன்று, கானல் நீரன்று.

சிந்தனைகளைத் தூய்மை யாக்குவாய், சத்காரியங்களி லீடுபடுவாயாக. கடவுளின் ஆதரவிற் கப்பாற் பட்டவனல்லன் நீ; சாளரங்களையடைத்துக் கதவுகளைப் பலமாகத் தாளிட்டு இருட்டறையில் தனியாக உட்கார்ந்து, "யான்துணையற்றவன், துர்ப்பலஸ்தன்," என்று நொந்தாவது, அல்லது, "என் அந்தரங்க எண்ணங்களை, என் கரவுச் செயல்களைக் கவனித்துக் கண்டிப்பவர் எவருமில்லை" என இறுமாந்தாவது கெடாதே! எவ்வெண்ணமும், எக்கருமமும் வீண் போகா; சர்வ வியாபக வஸ்து அறிந்து தக்கனசெய்யும்.

ஆசா பாசங்கள் பயம் என்பனவாதிகளுக்கு உட்பட்டு, உன் மேலான வாழ்க்கையைச் சிதைத்து மடியாதே, தூல்லிய நோக்கத்தைக் கைவிடாய்!

வெளிக்கு எவ்வளவு பராக்கிரம ஆடம்பரங்களுடன் தோன்றிய போதிலும், மானுடன் பதரே; ஆதலால், எம்மனிதனையும் சுயாலோசனை என்பது இல்லாது நம்பித் தொடர்ந்து அலையாதே!

இன்னலிடர்கள் இடையூறிடுக்கண்கள் வலிவருத்தமேக்க மாகியவைகள் உன் திறமையைப் பரீக்ஷித்துப் பகிரங்கப் படுத்தவே நின்று நிலவி, உன்னைச் சார்ந்து அலப்புறுத்துகின்றன என்பதை மனதி லிருத்துவாய்.

பொருள் செல்வாக்கு தேகபுஷ்டி கீர்த்தியாகியவைகள், நாளடைவில் தேய்ந்து மழுங்கி மறையும். அறமேநிலைக்கும்.

ஜீவகோடிக ளெல்லாம் உன் சகோதரர்களாவர். இவ்வுலகம் உனது இல்லம், சமஸ்தானம்; யாவரும் முழுமுதற் பிதாவின் குழந்தைகள், ஒரே உயிரின் பலதிறத் தோற்றங்கள். ஆதலால், சுயநலப் பேய் என்றபெயர் எடுத்து நில்லாதே!

தீக் குணத்தாலன்று, அறியாமையி ஞற்ருன் மானுடர் தவறுகிருர்கள்; மதி மயக்கத்தால், புத்தியின் சலனத்தால், சித்தத்தின் பலஹீனத்தால் நன்மையைத் தீமையெனவும், தீமையை நன்மையெனவுங் கொண்டு, சிற்றின்பம் பேரின்பங்களின் பேதங்களை ஓர்ந்து அறியாதேனும், மறந்தேனும், தீயன ஏற்றுச் செய்து, நல்லன விடுத்து அவதிப்படுகின்றனர் மாந்தரிற் பெரும்பாலரும் என்ற உண்மையைக் கிரஹித்து, பிறர் பிழைகளை, குறைகளை, குற்றங்களை, தூஷணையைப் பொறுப்பாய். பொறுத்து மன்னிப்பாய், மன்னித்து மறப்பாய்.

இருளென்பது குருடாகத்திற்ருன் உளது.

மனம் பதருய், நிந்தையுலகில் நுழையாய்! பலனை எதிரிட்டுக் கருமங்க ளியற்ருய்! புகழ், லாபம் முதலிய

வைகளை முன்னிட்டு உழைத்துத் தத்தளிக்காதே! பந்தங்களைத் தகர்த்துத் தளையையறுத்து, விடுதலைபெற்று உயர்ந்து இனித்திருப்பா யாக.

கடற் பிரயாணத்தை ஒத்துளது வாணாள்; பாசப் புயல்களால் புரட்டப்படலாம், ஆசைச் சுழல்களி லகப்படலாம், துன்பப் பாறையின்மீது மோதப்படலாம். எனினும் கவலையுறாதே, துடிக்காதே! ஜயமும் தோல்வியும், இறப்பும் பிறப்பும், உயர்வும் தாழ்வும் அவனையே காரணமாகக் கொண்டுள. தளரா மனத்துடன், அயரா ஊக்கத்துடன், பதறா வுள்ளத்துடன் "தீமை"களைத் தைரியமாய் எதிர்த்து அடக்கவும் மாற்றவும் பிரயத்தனிப்பாய். வெற்றியும் தோல்வியும் உன்னைச் சார்ந்தனவல்ல.

அஞ்சி ஓடி மூலையிற் பதுங்காதே! உலகை உற்றுப் பார். சீர்மையைக் கவனி, எழிலை உணர், இலக்கணத்தை ஊகி, லக்ஷியத்தை அறி!

ஜீவகாலம் குறுகவே, வாணாள் ஒடுங்கவே, கூக்குரலிடாது, நெட்டுயிர்க்காது, இழிய பிரார்த்தனைகளுக்கு உட்படாது, சந்தோஷமாய், நிர்மல மனத்துடன், உட்சாந்தியுடன், வேஷதாரிகள் நடிப்பு முடிந்தவுடன் மேடையைவிட்டுச் செல்வதுபோல், உலகைவிட்டு அகல்வாய்.

மனைவி மக்கள், பந்துமித்திரர்களை அளவு கடந்து பற்றாதே. ஈசன் அவர்களை உனக்கு உவந்து அளிக்கின்றான். பின், காலக்கிரமத்தில், விலக்குகின்றான். எல்லாம் ஈசன் திருவுளம்!

உள்ளதை உள்ளபடி அறிவாய். மண்ணைப் பொன்னென மயங்காதே. அநித்திய வாழ்வை, நீர்க்குமிழியையொத்த யௌவனத்தை, அழகை, நித்யமெனக் கொள்வதே மனோ வியாகூலத்திற்கு விளைநிலமாவதுபோலும். மண் பாண்டத்தைப் பொன்பாத்திரமெனக் கொள்வதால், அது துகளாம் பொழுது, கலங்குகின்றோம்; சௌந்தரிய வதியை நித்யயுவதியென மருள்வதினின்று, அழகு மழுங்கி, அவளும் அழிகையில், கண்ணீர் சொரிகின்றோம்!

உடைமையினால் உடல் உரங் குன்றுகின்றது; உரிமையினால் உளங் குவிகின்றது.

பொருள்களல்ல, நிகழ்ச்சிக ளல்ல, ஆனால், அவைகளைப் பற்றிய நம்முடைய விசித்ர அபிப்பிராயங்களே நம்முடைய அல்லல்களுக்கு மூலகாரண மாவன. இதையறியாத மூடன் பிறரைத் தூஷிக்கின்றான், உலகாதிகளைப் பழிக்கின்றான், தெய்வத்தைச் சபிக்கின்றான். ஞானப் பயிற்சி பெறுபவன் தன் குறைகளையே நினைத்துநொந்து கொள்கின்றான்; ஆனால், தீர்ந்து தெளிந்த ஞானியோ, பிறரையும் தன்னையும் இகழாது, யாவும் பிரபஞ்ச கர்த்தாவின் லீலையெனத் தேர்ந்து மனப்புழுக்க மெய்தாதிருப்பன்.

சக்ரம் கோணம் சதுரம், இன்னு மிவைபோன்ற ஏனையவைகளைப் பற்றிய அறிவு ஒவ்வொருவனிடமும் இல்லாவிடினும், நன்மை தீமை, மேன்மை கீழ்மை வனப்பு இளைப்பு, சுகம் துரதிர்ஷ்டம், சாத்தியம் அசாத்தியம், என்பனவாதிகளைப் பற்றிய அறிவு ஒவ்வொரு ஆன்மாவிற்குள்ளும் இருக்கின்றது. இவைகளைப் பற்றிய சிற்றறிவினின்றே பிணக்கமும் தர்க்கமும் மறுப்பும் உண்டாகிச் செழிக்கின்றன. இத்தர்க்க வித்தியாசங்களுக்குக் காரண மென்னை? அவைகளைப் போக்குதற்கான வழி யென்னை? இவைகளைப்பற்றி ஆராய்ந்தறிய முயற்சித்தலே தத்வத்தின் ஆரம்பமாகும். சுயவிசாரிப்பினால், கூரிய பரந்த நோக்கத்தால், நானாவித அநுபவத்தால் அவைகளின் ஏற்றந்தாழ்வுகளைக் கண்டு, குணாதிசயங்களை நிர்ணயித்துக் கொள்ளுதற்கும் விடுத்தற்குமான செந்நெறியை வெளிப்படுத்துபவரே கலைஞராவர்; அவைகளை, அப்பியாசம் கர்மம் ஒழுக்கங்களால் நிரூபிப்பவரே ஞானிகள்.

மாட்டுச் சந்தையில், பெரும்பாலரும் மாடுவாங்கவும் விற்கவும் வருகிறார்கள். ஆனால், வியாபாரத்தின் மர்மங்களையும், அப்பிராணிகளின் தோற்றத்தையும் குணத்தையும் மெய்ப் பிரயோஜனத்தையும், இவ்வழக்கத்தை எவர் எதற்கு ஏற்படுத்தியுள்ளார் என்பதையும் அறிய விரும்பி, வந்து நின்று கவனிப்பவர் சிலரே. இதுபோலவே, மாந்தர் கூட்டத்திலும், ஆடுமாடுகளையொத்த நொய் தவிடு உமிபோன்ற, உடைமை உரிமை திரவிய லாபம் கீர்த்தி ஊழியம் ஆகியவைகளை வாங்கி விற்று ஏற்று மாற்றுவதிலேயே பெரும்பான்மையரும் தம் காலத்தைக் கழிக்கின்றனர். ஆனால், அக்கூட்டங்களின் ஆரம்பம் போக்கு முடிவுகளை, அப்பால் நின்று, கவனித்துப் பார்த்து ஆலோசித்தறிய முன்வருபவர் மிகச் சிலரே. இவ்வுலகின் ஆரம்பம் வளர்ச்சி வீழ்ச்சிகளையும், இவற்றிற்கெல்லாம் காரணமான மூலப்பொருளின் குணத்தையும், நாம் ஏன் தோன்றி நிலவிப் பெருகி மறைகிறோமென்பதையும்பற்றி விசாரிப்பவரின் தொகை மிக்க சொல்பமே. இத்தகையரே முற்றறிஞரெனப்படுவர்.

கருமமியற்ற நிர்ணயிக்கையில், முன்பின் ஆய்ந்தோய்ந்து பார்த்து, அதை இயற்றுதற்கான மார்க்கங்களையும், மார்க்கங்களின் தார தம்மியங்களையும், இடையில் நேரிடக் கூடிய தட்டுத்தடைகளையும், இவைகளை அகற்றுதற்கும் வெல்லுதற்கும் ஏற்ற உபாயங்களையும் இறுதிப் பயனையும், உன் திறனையும் செவ்விதின் அறிந்து,பின் அக்கருமத்தை ஏற்றுச் செய்து முடிப்பாயாக.

சாந்தம், சுதந்திரம், இன்பம் என்பன எளிதில் பெற்று அநுபவிக்கக் கூடியன வல்ல. அவதூறு அவமரியாதை மானபங்கம் அபஜயம் முதலானவைகளைக் கிஞ்சித்தேனும் பொருள்படுத்தாது, மேன்மேற் செல்ல உன்னைப் பழக்கிக்கொள்ள வேண்டும்.

ஆத்திர ஆலோசியாது செயல்களில் புகுதல் மதியீனமாகும்; வருத்தத்திற்கே இடந்தரும். லௌகிகனாயிருக்க இச்சித்துப் பின், இதற்கான முறைமைகளைப் பழுதறக் கற்று அப்பியசித்து அக்கடனைத் தீர்ப்பாயாக. பாரமார்த்திகனாக, அல்லது ஞானியாக விளங்கக் கருதுவாயானால், அதற்கான பயிற்சியிலும், அநுஷ்டானங்களிலும், இடைவிடாது, ஏகாக்ர மனத்துடன், ஈடுபட்டு உழைத்து உயர்வாயாக.

மெய்த் தத்வக்ஞனின் குணாதிசயங்களென்னை? குண நடத்தைகளிலும், சொல் செயல்களிலும் தூய்மையும் மேன்மையும் பொருந்தி விளங்குதல்; தூஷணை பூஷணைகளால் பாதிக்கப்படா திருத்தல்; உணவு பானம், பந்தயம் லாபம் நஷ்டம், முதலான சிற்றறிஞரால் போற்றிச் சிலாகிக்கப்படும் அற்பங்களைப்பற்றிப் பேசாதிருத்தல்; மௌனம் அடக்கம் பொறுமை, உண்டி சுருக்கல், சதாகாலமும் சத்திய சுந்திர மங்கள விஷயங்களைப் பற்றிய தியானத்தில் தோய்ந்திருத்தல்; வாழ்க்கைக்கு அதி அத்தியாவசியமானவைகளையே கொள்ளல், பிறருக்கு உண்டாகும் ஜயாபஜயங்களால் உள்ளங் கலங்காதிருத்தல், வீண் தர்க்கங்களிலும் இழிய சம்பாஷணைகளிலும் பிரவிர்த்திக்காமலிருத்தல், என்பனவேயாம்.

உனக்கு ஆகாதவைகளில் தலை யிடாதே; இடநேர்ந்தாலும், அதிசீக்கிரத்தில் அதை விட்டு நீங்குவாய்.

தேகத் தடிப்பையே பிரதானமாகக் கொண்டு மனோ வளர்ச்சியை விடுத்தல் மந்தமாக்களின் விசேஷ குணமாகும்.

உன் பெருந்தன்மையைச் செயல்கள்வாயிலாக அறிவுறுத்துவாய். உபந்நியாசங்களும் புத்தகப் படிப்பும் மாத்திரம் ஒருவனுடைய குணவொழுக்கங்களைத் திருத்த வல்லன வல்ல.

ஒவ்வொரு ஆன்மாவும் ஒவ்வோர் திறனுடன் ஜனித்து வளர்ந்து வருகின்றது. அத்திறமையின் குணாதிசயத்தைச் செம்மையாக அறிந்து முறைப்படி ஒழுகவேண்டும். இல்லாததை உளதென மருண்டு, அருமையானதை

எளிதெனப் பாவித்துத் தத்தளித்தல் அறிவுக் குறைவாகும்.

பிறப்பு இறப்பு, தோற்றம் அழிவு, வளர்ச்சி ஒழுக்கம், பூகம்பம் புயல் கடலின் ஆரவாரம் முதலானவை, நம் ஆதிக்கியத்துட் பட்டன வல்ல; ஆனால், எதை விரும்புவது, எதை ஒழிப்பது, எக்கருமம் எவ்வாறு எதற்காகச் செய்வது, தள்ளுவது, போன்ற விஷயங்கள் நம்முடைய சித்தப்போக்கைப் பொறுத்துளது. ஆதலால், பின்னவைகளையே ஊன்றிக் கவனித்துத் தக்கன புரியவேண்டும்; முன்னவைகளைக் குறித்து ஏங்கி ஆற்றுவதில் பயனுமில்லை, சிறப்பு மில்லை.

தேகாரோக்யம் மனோ திடம் உள்ளத் தூய்மை பரோபகார சிந்தனை கூர்மை ஆகியவைகளே நல்வாழ்க்கையின் லக்ஷியமாவன.

இழிய சிந்தனை செயல்களின் ஆட்சிக் குட்பட்ட வாழ்க்கை, கடுவிசைமண்டிப் புரண்டோடும் காட்டாறு போன்றது. அறம் தங்கிய ஆன்மா, தெள்ளிய இனிய வற்றாதவோர் ஊற்றுக்குச் சமமானது.

இச்சைகளைக் குறைக்கவே, விருப்பங்களை அடக்கவே பேரானந்தம் ஊறிப் பெருகும்.

பலி பூஜை முதலானவைகளை எதிர்ப்பாராது, கதிரவன் நாள்தோறும் உதித்து ஒளி வீசுவதுபோல், பிறர் பூஷணை லாபம் கியாதிகளை நாடாது, நற்கருமத்தைச் செய்வாயாக.

ஆசாபாசங்களை யடக்க எண்ணினால், அவைகளைப் பற்றிக் கனவிலும் நினையாதே.

தோல்வியினாலும்,ஆசா பங்கத்தினாலும் மனந் தளராதே.

ஜாதிகளுக்குள் ஒற்றுமையும், சங்கங்களுக்குள் சிநேகத்வமும், குடும்பங்களுக்குள் இணக்கமும் பரவச் செய்பவனே ஞானி.

கப்பல்களுக்குத் தீபஸ்தம்பம் உதவுவதுபோல் சம்சார சாகரத்தில் உழன்று அவதிப்படும் மாக்களுக்கு அறிஞர் உதவிபுரிகின்றனர்.

மேற்கின் இசைகள்.

2. மேல்காற்று.

"அறப்பயன் விளைதலும், மறப்பயன் விளைதலும்,
பிறந்தவர் இறத்தலும், இறந்தவர் பிறத்தலும்,
புதுவதன்றே தொன்றியல் வாழ்க்கை"

என்று மறையோன் வாய்மொழிகளால், வாழ்க்கையின் பழமையை நினைப்பூட்டிப் போகின்றார் இளங்கோவடிகள். வாழ்வென்னும் இத் "தொன்றியல்" ஒன்றை, ஒப்பில்லா இப்பழம்பெருங் கதையை நடத்திவைக்கும் பொழுது, அதன் பழமையான இயல்பை உணராது, காலம் புனைகின்ற பண்களுக்கேற்ப, உளங் களித்தோ, துயருழந்தோ ஆடி நிற்கின்றோம். வாழ்க்கைச் சங்கிலியிதனில் ஒரு கணுவே நாம் என்பதும், மற்றைய கணுக்களும், நம்மைப் போன்று கனவும், நனவும், இன்பமும் துன்பமும் சேர்ந்தியக்கியுள்ள பொருள்கள் என்பதும் அறிந்திலோம். கவிஞனொருவன் வருகிறான். நமது அறியாமையையும், அதனால் நமக்குக் கிட்டாதனவற்றையும் தெளிகிறான்; வாழ்வின் மறைபொருளில் தனக்குப் புலனாகியவற்றை மனதள்ளும் பாடல்களாக வெளியிடுகிறான்; நமது செவிகளை வேண்டுகிறான். ஆயினும், "மருள் தீர்ந்த, பாட்டும் உரையும் பயிலாதன" எண்ணிறந்த "ஓட்டைச் செவியு முள" என்று ஔவையார் முறையிடுவதில் அந்தோ! உண்மை தங்கியுளது.

இதனால், கவிஞன் என்பான் முற்றும் உணர்ந்தோன் என்பதாவது, அல்லது,

"உலகம் யாவையும் தாமுள வாக்கலும்
நிலைபெ றுத்தலும் நீக்கலும்"

ஆகிய "அலகிலா விளையாட்டின்" மருமத்தை ஐயமறத் தெளிந்தோன் என்பதாவது எனது கருத்தன்று. வாழ்வின் உட்பொருளை நாம் அறியாதவாறு, அதற்கும், நமக்கும் இடையே நிற்பது நமது பேதைமை. இப்பேதைமைக்கு முதற்காரணமாக விவகரிப்பது வயிற்றுப் பிழைப்பு. இவ்வயிற்றுப் பிழைப்பெனத் துவக்கிய பேதைமை "நாப்பிளக்கப் பொய்யுரைத்து நவநிதியம் தேடி" நிற்பதிலோ, அன்றி, அதற்கப்பால் இழுக்கும் இன்பத்தை விழைதலிலோ முடிகின்ற செயல்வளைய மாகின்றது. இவ்வளையமோ, தன்னைச் சுற்றி இருமருங்கும், தனக்கு வித்தான உணர்ச்சி வளையம் ஒன்றையும், தானே விளைவிக்கும் உணர்ச்சிக் கோவை மற்றொன்றையும் கொண்டுளது. ஒன்றுக்குள் ஒன்றாகிக் காரண காரியத் தொடர்புகளாக நிற்கும் இச்செயல்வளையங்கள் உணர்ச்சிவளையங்களின் நடுவிலே பொருந்தியுள்ள நமக்கு, அவைகளைத் தெறித்து, அவைகட்கு வெளியேநின்று சிந்தனை யீட்டும்வன்மையும் அதன்வழியே வாழ்வின்மறைபொருட் போதமும் கிட்டாதது அதிசயமன்று. அதிசயம் உண்மையில் யாதெனில், நமது செயல்களையும், உணர்ச்சிகளையும் அன்வயப் படுத்தி அவைகட்குக் குறிப்புரை எழுதும் கவிதையின் மாண்பே. கவிஞன் வாழ்கின்ற தேயம் செய்கைக்கும் உணர்ச்சிக்கும் புறம்பேயுள்ள சிந்தனை நாடு; எனினும் அந்நாட்டெல்லையுள் எங்கணும் மனிதசமூகம் இயற்றும் கருமங்களும், உறுகின்ற உள்ள வேறுபாடுகளும் சேர்ந்த வாழ்வின் பெருங்குரல் தோயும். கலக்கமும், தடுமாற்றமும் விளைத்து அர்த்தமே யில்லாமல் வெறும் ஓசைப் பகுதிகளாகவே நமக்குப் படுகின்ற வாழ்வின் இக்குரல் சிந்தனை நாடு சாரும்பொழுது, ஆரோகண அவரோகணக் கிரமம் அடைந்து, மதுரமான இராக ஆலாபனமெனத் தெளிந்து பொருள் கமழ்கின்றது. இதைத் தனது கருத்தால் கவர்ந்து, பாடல்களில் கலந்து விடுகிறான் கவிஞன். எனவே, இப்பாடல்களைப் பருகுவோமாயின்,அவைகளுடன்,வாழ்வின் பொருள் தேங்கும் இசையை அருந்துவோம். மெல்ல, மெல்லச் சிந்தனைநாட் டெல்லையையும் அதற்கப்பாலும் சேர்ந்து, பொருளிலா ஒலித்திரளாகத் தோற்றும் வாழ்வின் குரலைப்பொருள் ஒலி இராகங்களாக நாமே மாற்றி அனுபவிக்க வல்லவ ராவோம்.

நமது பேதைமைக்கு மற்றொரு காரணமாக நிற்பது பழக்கம் என்ற கொடுநோய். இது யாவரிடம் தீவிரமாகப் பரவியுளதோ. அவர்கட்கே புலனாவதில்லை. ஆனால், அது செய்கின்ற தீங்கிற்கோ அளவிலது. இந்நோய் அடைந்தோர் இயற்கை யழகைக் குறியார். மாம்பொழிலுள்ளே பிற்பகல் மோனத்திற்

களித்து, குயிலினம் இசை பொழியலாம்; "கள்ளவிழ் சண்பகப் பூமலர் கோதிக் களித்திசை பாடுங் குயிலே" என்று ஆண்டாளைப்போல் கூவி யழைத்து "இசைபெழுப்புக லென்னே! ஈசனை அறிந்தனையோ இயம்புதி" யென்று பரவசமடையார் பழக்க நோய்ப்பட்டோர். கார்கால மேகங்கள் அணிவகுத்துநின்று காய்ந்திருந்த உலகின் உள்ளங் குளிரப் பெருமழை சொரியலாம்; ஆனால் மின்னலின் அழகும், இடியின் குமுறலும், மழையின் இழுமென் ஓசையின்பமும், பைந்தளிர்த்தருக்களும், புல்லும், பூண்டும், செடியும் கொடியும், பழக்கநோய் கொண்டார்க்குப் பொருளேயில்லாதன. "மடலிடைக் கீறி வண் பாளைகள் நாற" வைகறை கூர்வதும், மேக வண்ணத்துகில் போர்த்து, ஒல்கி நடந்து மாலைப்பொழுது மேற்கே செல்வதும், "அருந்த வமரர் கலக்கியநா ளமுத நிறைந்த பொற்கலசம் இருந்ததென"த் திங்கள் எழுவதும், "ஆழ்கடல் அலைதிரைக் கையெடுத்தாடு"வதும் அவர்கட்கன்று. எனவே, ஏழ்மையான சிறுமலரொன்று, இயற்கையழகில் திளைத்த ஆங்கிலக் கவியாம் 'வர்ட்ஸ்வர்த்' என்பாருக்கு ஊட்டியது போல் ஆழ்ந்த சிந்தனைகளை இவர்களுக்கு எவ்வாறு ஊட்டும்! மாலை மதியமும், மென் தென்றலும், இளவேனிலும், "மூசுவண்டறை பொய்கையும்" ஈசன் "இணையடி நீழலை" எவ்வாறு மனக்கண் முன் கொண்டுவரும்! எங்கணும் பரந்து, "காண்மின்!" என்று எதிரே பொலியும் இயற்கையெழிலைப் பொருட்படுத்தாதார் மனிதவாழ்வை ஆய்வரோ? ஒருபொழுதும் இல்லை. அதன் துயரங்களும் இன்பங்களும், இழிவும் அழுக்கும், மேன்மையும், அழகும் அவர்கட்குப் புலப்படாவாறு பழக்கநோய் அவர்களைக் குருடாக்கி விடுகிறது. அவர்தம்நிலை கோயில் வாயிற்படியிலேயே குடியிருந்தும், மனதினில் எம்பிரானைக் கோயில் கொள்ளார்தம் நிலையன்னது. ஆற்றங்கரையிலும், கடைத்தெருவிலும், வீதிமருங்கிலும், பிச்சைக்காரர்களாகவும், தீராப்பெரு நோயாளர்களாகவும், "முதுகுபற்றிக் கைத்தலத்தால் முன்னொரு கோலூன்றி" காலத்தின் பரிகசங்களாக விதிர்விதிர்க்கும் கிழவர்களாகவும், துயரின் நிழல்கள் பல படிந்து நின்று காலன் ஆட்சிக்கு ஆற்றாது அவதியுறும் மக்கள் மொழிகளில் துயரின் குரல் ஒலிக்கும். ஆனால், பழக்கத்து வன்மையால் புலன் மழுங்கியவர்கள் இந்நிழல்களையும், இக்குரலையுங் குறித்து, மனநெகிழ்வுற்று மனிதவாழ்வினுள் இயங்கும் சகோதர பந்தத்தைப் பேணுவது இயலார். உயிரைத் துரும்பென நினைந்து போர்முனை உலவும் உண்மை வீரனது அஞ்சா உளமும், உலகைத் துரும்பென மதித்துக் காலனையும் குறியாது இகழும் அன்பின் திறனும், அறியாமைப் பேயுடன் போராடும் சாத்திரவலவன் பொறுமையும், மக்கள் முறுவலும், குழவியின் மழலையும், இவர்களது உள்ளத்தைக்கிளற மாட்டா. கவிஞனோ பழக்கமென்ற இக்கொடுநோய்ப் படாதவன். அவனைச்சுற்றி உலகிலுள்ள விஷயாதிகள் யாவும் அவனுக்கு எப்பொழுதும் புதியனவே. ஆதலின், அவைகளை அவன் மதிப்பிடின், அம்மதிப்பு, தாமரையிலையில் வீழ்ந்த காலைப்பனியெனத் தூய்மையான புதுமையொன்றுபெற்றுத் திகழ்கிறது. "நாடோறும் ஊடாடியும் கவனியாது அலக்ஷியமாகச் செல்வதின் பேதைமை அறியீரோ! காண்மின்! அழகுளது. அன்புளது. ஆயின் துயரமும் உளது உலகிதனில், ஒவ்வொரு பொருளும்; ஆகவே நாமும், உலகத்துள்ள மற்றெல்லாப் பொருள்களின் இயற்கையான தன்மையோடு ஒன்றியிருப்பது குறிமின்!" என்றோதும் உண்மைக் கவியின் பாடல்களே பழக்க நோய் களையவல்ல அருமருந்து.

ஆனால் கவிஞனும் நம்மில் ஒருவனே. வயிற்றுப் பிழைப்பிற்கெனக் கிளம்பிப் பெருகும் சமூகப் போரிலோ, மனநலிவும், புலன் தளர்வும் உறுவிக்கின்ற பழக்கக் கொடுமையிலோ அவன் உழலாதிருப்பன் என்பது உண்மையேயாயினும், அவ்வாறு இருப்பது கவிஞனுக்குள்ள அவசரத்தில்மட்டுமே என்பதை மறத்தலாகாது. கவிஞனும் சிந்தனை நாட்டிலிருந்து வாழ்க்கையெனும் அமர்க்களத்துச் சிற்சில சமயங்களில் வீழ்ந்து நம்மில் ஒருவனாகின்றான். அப்பொழுது அவன் அடையும் வேதனைசொல்லத் தரமன்று. சிந்தனைநாட்டில் அனுபவித்த சுயேச்சையும், கனவெழுப்புந் திறனும் இழப்பதன்றி, வாழ்வினுள் வீழ்வதன்முன் அவனுக்கு உதித்து, அவன் பாடல்களாக நெய்துள்ள எண்ணங்களையும், கனவுகளையும், இப்பொழுது மனித சமூகத்துள்ளே பாமரனாக அவன் அடங்குவதால் மனிதர் குழாம் பொருட்படுத்தாது அகலுமோ என்ற பெருங்கவலை அவனைச் சார்கிறது. இதனால், மனிதர் வாயைப் பார்த்தவண்ணமாகவேகவிஞன் பாடல்களைப் புனைகின்றான் என்ற முடிவை எய்த வொண்ணாது. உண்மைக் கவிஞன் பாடுகின்ற பாடல்கள் யாவும் புனலொழுக்காய் அனாயாசமாக நடப்பன. பாடும்பொழுதெலாம், கரைபுரண்ட உணர்ச்சி வெள்ளத்தின்மேல் அலைந்தும், உள்ளழுந்தியும், கடல்நுரை மோதும் காலைப் புள்ளென, மனங்கொள்ளாதெழும் கவிப் பெருக்கை, உலகிலே, கவிஞன் சிந்தவிடுவான். எனினும், பாடி ஓய்ந்து வாழ்வில் வீழ்ந்தபின், தான் பாடிய பாடல்களும், எழுப்பிய சிந்தனைகளும் மனித சமூகத்தால் நம்பப்பட்டு நன்மை பயப்பனவோ என்று அவன் கவலைகொள்வது இயற்கையே; இக்கவலையையும், தான் தாழ்ந்ததாலடையும் வருத்தத்தையும் ஒரு பாடலாக அவன் புனைவது அதனினும் இயல்பே.

இவ்வாறு வருந்தி, பாடல் புனைந்தவன் ஆங்கிலக் கவிஞனான ஷெல்லியென்பான். ஷெல்லியின் வாழ்க்கை துயரம்நிறைந்தது. இருபத்தொன்பது வருடங்களே அவன் வாழ்ந்தனனேனும் இக்குறுகிய காலத்துள் அவன் அனுபவித்த சமூக நிந்தனையும் மனக் கொந்தளிப்பும், ஆன்ம சஞ்சலமும் கொஞ்சமல்ல. உலகின் உள்ளுறை யழகையும், மனித உள்ளத்திற்பொதிந்துள்ள வரம்பிலா மணியையும் தனது பொருளெனக் கையாளுந் திறத்தைக் கவிஞனுக்கு அமைக்கும் கடவுள், எளிதில் வருந்தி உழலும் மனப்பான்மையை அத்திறத்தின் எதிர் எடையாகத் தருகின்றார் போலும். மேற்கின் குரல் சோலைகளிற் சாரும் பொழுது, அதன் இசையை உலகிலே பிழிவது உலர்ந்த மர மல்லவே! தளிரும் இலையும் தழைத்த மாக்கொம்பெனச் சமூகம் உயிர்த்த பரிகசத்திலும், தன் மனமே வீசிய அதிருப்தியிலும்,ஷெல்லி தனது வாழ்நாள் முழுதும் வருந்தினான். பண்டை நாட் கோட்பாடுகளாலும், அவைதம் நன்மையெலாம் ஓய்ந்த பின்னும் அவைகட்கு அடங்கிநின்றகோழைத் தனத்தாலுமேயே, மனிதவாழ்வின் துயரமெல்லாம்

இந்தியாவிலும் பர்மாவிலும்

எங்கள்

தங்கக்கலன்களும் வெள்ளிக்கலன்களும்

உபயோகத்தோடு சுத்தமும் அழகும் சேர்ந்திருக்குந் தரத்தினை அனைவரும் அறிவர்.

சுத்தம்

சுத்த வெள்ளியும் சவரன் பொன்னுமே உபயோகப் படுத்துகின்றோம். உலோகத்தின் சுத்தத்திற்கு அடையாளமாக நாங்கள் செய்த சாமான்களின்மேல் டையமண்ட் டிரேட் மார்க் காணப்படும்.

அழகு

எமது மாதிரிகள் புதியன. கண்ணைக்கவரும் அழகுடையன. எங்களுக்கே பிரத்தியேகமான இவை நலத்திலும் வவமான நாகரிகமுடைய வெள்ளி வேலைகளின் அழகையும் பெருமையையும் அமையப் பெற்றிருக்கின்றன.

உபயோகம்

சுத்த வெள்ளிச் சாமான்களையே வாங்குவதன் இலாபம் எவருக்கும் தெரியும். வாங்கும் விலையையும் எத்தனை வருஷம் அந்தச் சாமான் அழகும் அழியாமலிருக்குமென்பதையும் வகுத்துப் பார்த்தால், "சிறந்த சாமான்களே மலிந்த சாமான்களுமாகும்" என்னும் பழமொழி பழுதாகாததை யறிவீர்.

குடும்பத்து வெள்ளிச்சாமான்கள் யாவராலும் மனங்கனிந்து பாராட்டப்படுவன. அவைகளைக் காணுந்தோறும் முன்னை நினைவுகள் பல ஒன்றன்பின் ஒன்றாய்த் தொடர்வது இயற்கையே. தலைமுறை தலைமுறையாய் இவைகளையும் இவைகளை வாங்கிவைத்த உங்களையும் கொண்டாடுவார்.

வாங்கி நீங்கள் வைத்து மகிழ்வதற்கும் நன்கொடை அளித்து மகிழ்விப்பதற்கும் உரிய எங்கள் வெள்ளிக்கலன்களை மனமுவந்து காட்டுகின்றோம், வாருங்கள்.

வெகுமதியளிக்க வெள்ளிக்கலன்கள்

உபயோகத்தாலும் அழகாலும் தனக்குச் சமானமில்லாத் தனிப்பெருஞ் சிறப்பாலும் அழியாத் தன்மையாலும் மிகப் பொருத்தமானவை.

கப் காஸ்கெட் தட்டு, அல்லது ஸெட்டாகச் சேர்ந்த சாமான்கள் எங்களிடத்தில் தயாராக இருக்கின்றன. இவைகளிலிருந்து வாங்கிக்கொண்டாலும் சரி இஷ்டமான மாதிரிப்படி எங்களிடம் செய்வித்துக்கொண்டாலும் சரி-பெற்றுக்கொள்பவர் தம் பொருட்டு கவனம் செலுத்தித் தேர்ந்தெடுத்திருக்கின்றீர்கள் என்று எங்களை மிகவும் பாராட்டுவர்.

அளவற்ற சாமான்கள் எங்களிடத்தில் செய்து தயாராயிருக்கின்றபடியால் நீங்கள் வேண்டியதைத் தேர்ந்துகொள்வது வெகு சுலபம். நாங்களும் உங்கள் தேவைக்குத்தக்கபடி எடுத்துத் தருவோம்.

எங்கள் கொள்கை

யோக்கியமாகவும் கவுரவமாகவும் நாங்கள் சரிவரச்செய்து விர்த்தி யடைகின்ற வரை வியாபாரத்தைப்போலவே இந்த வெள்ளிச் சாமான் டிபார்ட் மெண்டையும் நடத்தி வருகின்றோம்.

எங்கள் எஸ்டிமேட்

எந்தச் சாமான் எந்த மாதிரியில் வேண்டுமானாலும் கேளுங்கள். டிஸைன்களும் எஸ்டிமேட்டும் அனுப்புவோம்.

உங்கள் ஆதரவை வேண்டுகின்ற

ஸூராஜ்மால் லல்லுபாய் & கோ.,

135, பெரிய பஜார் திரிச்சிராப்பள்ளி.

வைர வியாபாரிகள், நகைகட்டுவோர் பொன்வெள்ளிக் கலன்கள் செய்பவர்.

313, எஸ்பளனேட், சென்னை.

SURAJMAL LALLUBHAI & CO.,

DIAMOND MERCHANTS AND JEWELLERS,
GOLD AND SILVER SMITHS.

135, Big Bazaar,
TRICHY.

313, Esplanade,
MADRAS.

[34-ம் பக்கத் தொடர்ச்சி]

ஓங்குவனவாதலின், பழைய வழக்கங்களென்ற விலங்குகளைத் தெறித்துச் சமூகப் புன்மையைப் பொசுக்க வேண்டுமென்றும், அமைதிததும்பும் புனிதச் சுயேச்சை மனிதருள்ளே நிலவக் கூடுமென்றும், ஷெல்லி மொழிந்தான். சிந்தனை எல்லையிலிருந்து, கவியென்னும் 'ஹோதாவில்' இவ்வாறு பேசியவரையில், "பித்தங்கொண்ட கவிஞன்ஒருவன் இவன்" என்றுசொல்லித் தன்வழியே சென்றது உலகம். பின், சொற்களைச்செயல்களாகமாற்ற ஷெல்லிமுயன்றதும், உலகம் கைகொட்டிச் சிரிக்கத் துவக்கியது. காதல் என்பது சுயேச்சைத் தத்துவத்தை நிகழ்த்த உதவும் உணர்வுகளில் ஒன்று என்றும், கல்யாணமென்பது உலகவழக்காகிப்போன சமூகக்கோட்பாடே, வேறன்று என்றும், ஆதலின் காதல் போகும்வழியே கல்யாணம் நடவாதுபோனால் பின்னதைத் துறந்து காதல்வழிச் செல்வதே முறையென்றும், சொல்வதோடுமட்டும் ஷெல்லி நின்றிருந்தால் உலகம் இதைப் பொருட்படுத்தாது அகன்றிருக்கும். ஆனால் அவன் சமூக முறைப்படி மணந்த மனைவியைத் துறந்து, தனது மனம் விழைந்த காதலியைச் சேர்ந்ததும், ஆங்கிலச் சமூகம் புண்ணடைந்தது உளறுவதோடு நில்லாமல், பைத்தியக்காரன் கற்களை வீசியெறியவும் ஆரம்பித்துவிட்டான் என்றெண்ணிப் பழிக்குப் பழியாக அவன்மேல் கற்களைப் பொழியலாயிற்று. அழகும், அன்பும் நிறைந்துளது உலகம் என்று பாடிய கவியின் இருதயம் கன்மாரியிதனால் நைந்தது என்று உரைத்தல் மிகை. இத்துயரத்தையும் ஷெல்லி ஒரு பாடலாக வடித்தான்:—

உலகமே! வாழ்வே! காலமே! நும் கடைசிப் படியினில் ஏறுகின்றேன். எதை உரமென நம்பி, அதன் மேல் நின்றேனோ அதன் மேலேயே நடுங்குகின்றேன். முதன் முதலில் நும்மை யான் அறிந்தபொழுது நீவிர் தாங்கிய பெருமை திரும்புநாள் எந்நாளோ? திரும்புவதா! இல்லை, இல்லை! அந்தோ, இனி இல்லவேஇல்லை."

எதை உரமென நம்பி அதன் மேல் நின்றானோ அதன் மேலேயே நடுங்கினானும். ஆனால் இவன் நடுங்கியதன் காரணம் உலக நிந்தனையும், சுய அதிருப்தியுமேயன்றி இவன் நம்பியவற்றின் உரக்குறைவன்று. எனவே, தான் நடுங்கியதால், தன்னைத் தாங்கிய சிந்தனைகளையும், நடுக்குறும் உரமிலாப் பொருள்களாக உலகம் கொள்ளுமோ என்ற ஐயமும் கவலையும் ஷெல்லியைச் சார்ந்தன. யாது செய்வான் கவிஞன்!—சிந்தனை நாட்டிலே உணர்ந்த சுயேச்சையும் தன்னம்பிக்கையும், வன்மையும் இழந்து, பழிக்கிடமாகி வாழ்விலே உழல்வது ஒருபுறம்; "பாடல்கள் என்பவை பரிசிலா உண்மையன்றோ! உலகம் அவைதமை நம்பி உய்யுமோ" என்ற கவலைச் சோர்வு மறுபுறம். இவ்விருதலைத் தீயினின்றும் கொஞ்சமேனும் விடுதலைபெறுமாறு நமது கவிஞன் இயற்கையழகில் அழுந்தினான். சோலைகளை யலைத்து, வனத்தின் உளத்தைக் கலக்கி, உலகெங்கணும், பழுத்து வதங்கிய இலைகளைப் பரப்பி ஓ வென்றிரைந்து ஷெல்லியைச் சுற்றிச் சென்றது மேல்காற்று—அந்த இலையுதிர்காலப் பெருங்குரல். மேல்காற்றின் தீவிர சஞ்சாரத்தையும், ஒப்பிலாச் சுயேச்சையையும் குறித்ததும் ஷெல்லிக்குத் தான் முன்னொருகால் உணர்ந்தவை யாவும் நினைவிலெழுந்தன. மேல்காற்றை விளித்துப் பாடலானான்:—

"நீ தூக்க வல்லதோர் இலையாய் இருப்பனேல், நின்னுடன் அசையவல்ல முகிலாய் இருப்பனேல், நினது வன்மையில் திணறி, அதன் சக்தியைப் பகிர்ந்தடைந்து சுயேச்சையில் நினக்குமட்டுமே தாழுமோர் அலையாயிருப்பனேல்.................... வேதனைமிகுந்த கடுமுடையிதனில் நின்னை இவ்வாறு இறைஞ்சி உழல்வேன் அல்லேன்."

புல்லாகவேனும், பூண்டாகவேனும் பிறவாமல் சமாதிகிட்டாப் புல்லனாய்ப் பிறந்தேனே யென்று வருந்தினார் அடிகள். இலையோ, முகிலோ, அலையோ மற்றெதுவாகவேனுமிருந்து சுயேச்சை பெறலாகாதா வென்றழுங்கினான் ஷெல்லி:—

"அலையென, இலையென, முகிலென, என்னைத் தூக்கி உயர்த்தி நில், கைவிடாதே! அந்தோ! வாழ்வின் முட்களில் வீழ்கிறேன்; குருதி பாய்ந்தழிகிறேன். ஆயினும் நின்போ லிருந்தவனே! அடங்கா நெஞ்சிலும், ஓயாவேகத்திலும், பெருமிதத் திட்பத்திலும் நின்போலிருந்தவனை அந்தோ! காலமென்னும் பாரவிலங்கு என்னைத் தளையிட்டு வளைத்துளது."

வாழ்வில் வீழ்ந்து, காலவிலங்கு கொண்ட கவிஞனை விட, மேல்காற்றில் உழலும் இலையும், மேகமும் அலையும் உயர்ந்தவை, சிறந்தவையென்று கருதினான் போலும். வேண்டுவன் மேல் காற்றை :—

"வனத்தைப்போலவே, என்னையும் நினது குழலாகச் செய்துகொள். எனது இலைகளும், வனத்தின் இலைபோலவே, உலர்ந்து உதிர்வன. ஆயினென் ? நினது பேரிசைகளின் தமரம், எம்மிருவர்கணின்றும், வருத்தந் தோய்ந்துளதாயினும், இனிமையையான ஆழ்ந்த, இலையுதிர் காலக் குரலையே பெற்றிடும்.

தீவிரமான ஆவியே! எனதாவியே யாகுவை. யானேயாகி நில், மும்முர வன்மையே!

வதங்கிய இலைகளென, எனது உயிரிலாச் சிந்தனைகளையும் உலகிலே பரப்பிப் புத்துயிர் விளைவி. அணைந்திடாத தீவர்த்தியிலிருந்து சாம்பரும், அனற்பொறியும் உதிர்ப்பது போலவே எனது மொழிகளை மாந்தருள்ளே தூவிடு.

தூங்கு மிவ்வுலகிற்கு, எனது நாவின் வழியே, தீர்க்க தரிசனத்தின் சின்னமென முழங்கி யார்ப்பரி. காற்றே! கூதிர் காலம் தோய்ந்தது. எனின், கோடை வர நாளாகுமோ?"

அவன் வாழ்விலே, ஷெல்லியைச் சூழ்ந்தது கூதிர் காலமே. ஆனால் அவனுடைய நெஞ்சம் நோக்கி நின்றது மனித சமூகத்து வசந்தத்தை. உண்மைக் கவியின் பாடல்கள் உலகிலே உலவும் வரையில், உலகம் உணர்வது கூதிரேயாயினும், எதிர்பார்ப்பதும், எய்துவதும் இளவேனில் என்பதில்ஐயமும் உளதோ!

நமது சந்தா நேயர்கள் தமது சந்தா பணத்தை உடனே மணியார்டர் செய்து விடும்படி கேட்டுக்கொள்கின்றோம். இரண்டொரு வாரங்களுக்குள் அனுப்பாத பக்ஷத்தில், வி. பி. மூலம் நாங்கள் பெற்றுக் கொள்ளும்படி எதிர்பார்க்கின்றார்களென்று உணர்ந்து, மூன்றாவது வாரம் வி. பி. யில் அனுப்புவோம்.

மானேஜர்.

முருகன், ஓர் உழவன்.

ஸ்ரீமான், K. S. வேங்கடரமணி M.A., B. L., ஆங்கிலத்தில் இயற்றியதும், இந்த நாட்டில் மாத்திரமல்லாமல் ஐரோப்பிய தேசங்களிலும் பெரிது கொண்டாடப் பெறுகின்றதுமான "Murugan, The Tiller" என்னும்

நாவல் நூலிற்கு

கிருஷ்ண குமாரி

என்பவரால் எழுதப்பெற்ற தமிழ் மொழிபெயர்ப்பு.

கதையின் அழகும் வாழ்க்கையின் தத்துவங்களும், மாநட இயற்கையும் பலவேறு பாத்திரங்களின் அமைப்பும் வாய்ந்த இப்புத்தகம் எளியநடையில் அமைந்திருக்கின்றது. (400 பக்கங்கள் கொண்டது)

விலை ரூ. **1-8-0** (வி. பி. சார்ஜ் வேறு). மானேஜர்,

கலா நிலயம்,

11, வேளாளர் தெரு, புரசைபாக்கம், சென்னை.

வெண்பாப் புலி என்ற புகழோடு விளங்கியவரும்

ஸ்ரீ மீனாக்ஷி சுந்தரம் பிள்ளையவர்கள் மாணாக்கரும் ஆகிய

ஸ்ரீ. தி. சு. வேலுசாமிப் பிள்ளை அவர்கள் இயற்றிய

கந்தபுராண வெண்பா

ஆறு காண்டங்களும் 5665 செய்யுள்களும் அடங்கியது.

இதுகாறும் வெளிவந்திராத இந்நூல் ஓதற்கினிய நேரிசை வெண்பாக்களால் அமைந்தது. அறுமுகக் கடவுளின் அருள்பெருகப் பாடிய இவ்வெண்பாக்கள் கற்றோர் இதயத்தைக் களிக்கச் செய்யும் தன்மையன.

விலை ரூ. **4-8-0**. வி. பி. சார்ஜ் வேறு.

மானேஜர், கலா நிலயம்,

11, வேளாளர் தெரு, சென்னைப்பட்டினம்.

THOUGHTS FOR STATESMEN

from

MONTESQUIEU AND TOCQUEVILLE

IN ENGLISH

by

T. N. SESHACHALAM B.A., B.L.

WITH A FOREWORD

by

Sriman S. Sreenivasa Aiyangar

The purpose and Scope of the book is well set out in the opening paragraph of the author's preface which is quoted below:—

The course of history may vary in some details with different countries and at different periods, but human nature, the fundamental spring of all actions remains constant and shows a remarkable uniformity throughout. A proper understanding of that phase of human nature which specially manifests itself in the carrying on of a corporate existence should be an invaluable equipment to those who are engaged in the making or the maintaining of a nation. Philosophical historians have attempted to find the common principles and emotions which, operating upon men of every climate and degree of civilization, produce certain results. With their keen powers of observation and insight they gather a comprehensive view of our society, institutions and destiny. An attempt is made to collect in this book some of the very important observations made and far-reaching results arrived at by two notable French writers of eminence and perhaps not very well known to an ordinary English reader.

It is needless to add that the selection of these passages has been made with an eye to their applicability to the present conditions in India.

Price Re. 1-8-0. (V. P. Charges extra.)

Apply to the Manager, "*KALANILAYAM*"

11, Vellala Street, Purasawalkum, Madras.

தமிழ் நாடெங்கணும் புகழ்வாய்ந்த
எங்கள் நிகரிலாத
" ஆநந்த குணபோதினி "
ஆடி மாதமுதல் ஆங்கில மாத ஸஞ்சிகைகளை
யொப்ப நவீன நாகரீக உருவுடன்

அமிர்த குணபோதினி

என்னும் புதிய பெயர் தாங்கிப் புதுவிதமாக 3-வது ஆண்டு] வெளிவருகின்றது.[3-வது ஆண்டு பிரபல ஆசிரியர் ஸ்ரீமான் S.G. இராமாநுஜலு நாயுடு அவர்களால் இப்பத்திரிகை எழுதப்பட்டு வருகிறது.

அநுபவ ஞானபோதனையில் இதுபோன்ற முதன்மையான மாத ஸஞ்சிகை வேறில்லை. கௌரவமான விகடம் இப்பத்திரிகை யொன்றில் தான் காணலாம். இதுவே விவேகசாரம், இதுவே ஜநவிநோதினி, இதுவே விசித்திர விலாஸம், இதுவே விகடப் பொக்கிஷம், இதுவே அநுபவ ஞானவாரிதி, இதுவே அற்புத ஞானபோதகம், இதுவே ஆச்சரிய சிந்தாமணி, இதுவே ஆநந்த தீபம் என்று எண்ணலாம். பதினாயிரம் சந்தாதாரர்களை உடையது. இன்னும் பல்லாயிரம் சந்தாதாரர்கள் தேவை. பார்க்க அழகாய், படிக்க இனிமையாய், நினைக்க மனோகரமாயிருப்பது எது? எங்கள் "அமிர்தகுணபோதினி"யே. 56-பக்கங்களுடனும் ஒரேரூபாயைச் சந்தாவாகக் கொண்டுள்ள உயரிய மாதப் பத்திரிகை தமிழ் நாட்டில் இது ஒன்றேதான். இதற்குச் சமமான தமிழ் மாத பத்திரிகை எதுவுமே கிடையாது. இது யாவரும் அறிந்த விஷயமே. வருஷ சந்தாரூபாய் ஒன்றே. வெளி நாடு ரூ. 1 4 0 மாதிரி காப்பி இனும்.

தி. இராஜகோபால் முதலியார்,
அமிர்த குணபோதினி ஆபீஸ்,
302, தங்கசாலை வீதி, சென்னை.

உ

வியாஸங்கள்.

வியாஸங்கள் ! வியாஸங்கள்! !

வியாஸங்கள் மிக எளிதில் அறிந்து அதன்படி நடந்து நன்மையடையக் கூடியவிதமாக எழுதப்பட்டுள்ளன.

கீழ்கண்ட வியாஸங்கள் ஒவ்வொரு தமிழரும் வாங்கி வாசித்துப் பயனடையக் கூடியனவாகும். நமது முன்னோர்களுடைய உபதேசங்கள் பலவற்றை நம்மில் பலர் அறியாமலிருக்கிறார்கள். காரணம், அவையாவும் செய்யுளாக இருப்பதினால். இந்த வியாஸங்கள் அச்செய்யுட்களையே பெரும்பாலும் தழுவி வசனமாக எழுதப்பட்டிருக்கின்றன.

	ரூ.	அ.		ரூ.	அ.
அன்பு	0	1	பொதுமதம்	0	2
பலவகை மனிதர்	0	1	ஆரூதாரம்	0	2
தவம்	0	1	சந்தேகம்	0	2
பொறுமை	0	1	கற்பு	0	3
இருவினை	0	2	அஸ்தபூஷணம்	0	4
இல்லறம்	0	2	பதினாறுபேறு	0	4
ஆலயவழிபாடு	0	2	என் தந்தையார்	0	6

மேல்கண்ட பதினான்கு புத்தகங்களையும்
ஒரே தடவையில் வாங்குபவர்களுக்கு
ரூபாய் இரண்டுக்குக் கோடுக்கப்படும்.

தபால் சார்ஜ் இனும்.

இன்றே எழுதுங்கள் !

நவீனகதா புத்தகசாலை,
மங்கமாரி வீதி, இரங்கூன்.

A MOMENTOUS BOOK

ANCIENT JAFFNA

BY

Mudaliar C. RASANAYAGAM C. C. S.

WITH AN APPRECIATIVE FOREWORD

BY

Professor S. KRISHNASWAMI AIYANGAR, M. A.

An authentic History of North Ceylon, particulary of Jaffna, based on
works..heological Epigraphic and Linguistic researches is stated here for the first time
time. The ..nected logical manner from ancient times up to the occupation of the
of the Tamil lan..he Europeans. The progress of civilisation in Ceylon and Southern India
and his imaginatio.. .. other countries associated with them as brought out here reads
literatures and philosophy .. infringing on the cannons of Historic Research. The Honest
pre-eminently moral, transcend..
formed to clarify the elemental Truths ..iring without misleading.

Kamban professes Valmiki's Sanskrit e.. read this book with pleasure and profit,
nam. But this is almost akin to Shakespeare's in..
Ramayanam is the embodiment of a mind, the most
portrayal of the details of actual existence, in the dazzling spe.. Charges extra)
in the profound complications of passions, human and superhuman.
runs in crystal stream of fortytwo thousand three hundred and forty eight ..
glorifying the Creator and reflecting His creation.

With the Kural and the Gita, the Ramayanam is the most ennobling book that
written. Like many other good things, however, it is not generally understood and mad..
part of one's being. The realization of the conception of life, individual and social, tha..
and takes shape in one's mind as this wonderful epic is read and re-read ought to ..
destiny of mankind. Price Re. 1-4-0. (V. P. Charges extra.) MADRAS.

Apply to the Manager, "*KALANILAYAM*" 11, Vellala St., Purasawalkum,

..B.L. (Editor)

KALANILAYAM.
REG. NO. M, 2324.

1890